விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 29 வெள்ளிக்கிழமை (14.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 270

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஐ.நா.அதிகாரிகள் குழு

# இன்று கொழும்பு வருகை

## சிறப்பு நிபுணர் மெகாலியும் உடன் வருகிறார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் தொழில்நுட்ப அதிகாரிகள் குழுவினர் இன்று கொழும்பு வருகை தரவுள்ளனர். இக்குழுவில் சர்வதேச நாடுகளின் குற்றவியல் தொடர்பாக தண்டனை வழங்கும் செயற்பாடுகளில் 33 வருட அனுபவம் பெற்ற சிறப்பு நிபுணரான மெகாலி என்பவரும் இடம்பெற றுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் மற்றொரு வீடு ஆனந்தபுரத்தில் கண்டுபிடிப்பு!

(ஆனந்தபுரம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தங்கியிருந்ததாக கூறப்படும் மற்றுமொரு வீட்டை படையினர் ஆனந்தபுரம் கிராமத்திற்குள் கண்டுபிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கிராமத்திற்குள் முற்றாக இடிந்த நிலையில் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் புகைப்படங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன

(மட்டக்களப்பு)

காத்தான்குடியில் உள்ள 4-வது சுரங்கப்பாதையில் பொறிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி மற்றும் அவரின் குடும்பத்தினரின் புகைப்படங்கள் இனந்தெரியாதோரினால் சேதமாக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடியில் முதலாவ (19ஆம் பக்கம் பார்க்க)

## பொது நலவாய நாடுகளின் பிரதிநிதிகள் நேற்று யாழ் வருகை



(யாழ்ப்பாணம்)

பொதுநலவாயநாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 61 பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.

யாழ்ப்பாணம் பலாலிக்கு விமானம் மூலம் வந்திறங்கிய இந்தக்குழுவினர்களை பாரம்பரிய கைத்தொழில் மற் (19ஆம் பக்கம் பார்க்க)

## பீரிஸ்-பிளேக் நேற்று சந்திப்பு



(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக்கிற்கும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கும் இடையில் சந்திப்பொன்று வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத ஆஸி பயணம் நேற்றும் 86 பேர் கைது!

(சிலாபம்)

படகு மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்ற 86 பேரை சிலாபம் கடற்பரப்பில் கடற்படையினர் நேற்று கைது செய்துள்ளனர்.

இதன் மூலம் இவ்வருடம் கைது செய்யப்பட்ட சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை 1900ஆக உயர்ந்துள்ளது.

நேற்றுக்காலை செனேஷா துவ என்னும் படகில் பயணம் செய்த 58 தமிழர்கள் 9 சிங்களவர்கள் உட்பட (20ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்!

### பொதுநலவாயத் தலைவர் வலியுறுத்தல்

(கொழும்பு)

நல்லிணக்கம் தொடர்பாக, சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தவறினால் பொதுநலவாயத்தின் நம்பகத்தன்மை சவாலுக்குள்ளாகும் என பொதுநலவாய அமைப்பு தெரிவித்துள்ளது.

தனது உள்நாட்டு பிரச்சினையை சமதானமாகவும், கூட்டாகவும் தீர்ப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் மனவுறுதி மற்றும் ஆற்றலில் சர்வதேச சமூகம் நம்பிக்கையை இழந்தால் அது துரதிர்ஷ்டவசமானதாகும்.

பொதுநலவாயமானது அரசுகளுக் கிடையிலான பாரிய சக்தியொன்றாக தன்னை வரையறுத்துக்கொள்ளத் தவறியதாக குற்றம் சுமத்துபவர்களுக்கு தானே ஆயுதம் வழங்கிய நிலைக்கு பொதுநலவாயம் தள்ளப்படும் நிலையை இது ஏற்படுத்தும் என பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவின் தலைவர் சேர்.அலன் ஹெசெல்ஹர்ட் எம்.பி.கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நிகழ்த்திய லக்ஷ்மன் கதிர்காமர் ஞாபகார்த்த உரையின் போதே ஹசெல் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசின் குற்றங்களிற்கு சிங்களவர்களை தாக்குவது சரியல்ல!

### ஜெயலலிதா சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கை அரசின் தமிழினப்படுகொலையை தமிழக அரசு கண்டிக்கும் அதே நேரத்தில் தமிழகத்துக்கு பயணம் மேற்கொள்ளும் சிங்களவருக்கு இடையூறு ஏற்படக் கூடாது என்பதில் உறுதியாகவும் இருக்கிறது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையிலேயே முதல்வர் (20ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண ஆட்சி குறித்து கூட்டமைப்பிடம் பிளேக் கேட்டறிவு

(மட்டக்களப்பு)

கிழக்குத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றி குறித்தும் கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பதில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலை குறித்தும் றொபர்ட் ஓ பிளேக் தம்முடன் கலந் துரையாடியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வவிஜயம்மேற்கொண்டு இலங்கைக்கு வருகைமேற்கொண்டுள்ள மத்தியமற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி (20ஆம் பக்கம் பார்க்க)



**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி எழுதும் வீதிகள் பயப் பீதியில் பயணிப்போர்

தற்போது வடக்கில் நடைபெற்று வரும் அபிவிருத்திப் பணிகளில் முக்கியமான ஒரு பணியாக வீதிஅபிவிருத்திப் பணியும் இடம் பெற்று வருகின்றது.

இதற்காக பல பழைய தார்வீதிகள் மாற்றப்பட்டு புதிதாக காப்பெற் வீதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறு புதிதாக அமைக்கப்பட்டுவரும் காப்பெற் வீதிப்பணிகள் பாதுகாப்பற்ற முறையில், பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்படுவதாக பலத்ரப்பட்டவர்களும் குற்றம்சாட்டியுள்ளனர்.

திருத்தம் செய்யப்படும் வீதிப்பகுதியை பிரயாணத் தடைப் பகுதியாக அறிவிக்காது பிரயாணிகளின் பயணத்துடனேயே வீதியை யும் செப்பனிடுவதனாலேயே பலரும் பாதிப்புக்குள்ளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

வீதியில் பரவிக் குவிக்கப்பட்ட கற்களின் மீது இரட்டைச் சில்லு வாகனங்களில் பயணிப்பவர்களே அதிகம் விபத்துக்குள்ளாகின்ற சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

அதிலும் இரவு நேரப் பயணங்களில் எதிரில் வரும் வாகனத்துக்கு வழிவிடுவதற்காக சற்று விலத்தி வாகனத்தைச் செலுத்தினால் விபத்துக்குள்ளாக வேண்டிய நிலைதான் ஏற்படும். ஏனெனில் வீதிக்கருகில் வீதி அகலிப்புக்காக வெட்டப்பட்ட பள்ளம் தான் அங்கே இருக்கும்.

யாழிலிருந்து வடமாராட்சி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளுக்கு சென்று வருபவர்களே வீதி அகலிப்பு மற்றும் திருத்தப் பணிகளால் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

மாற்றுப் பாதைகளைத் தெரிவு செய்தாலும் அப்பாதைகளிலும் வீதித் திருத்தம் இடம் பெறுகிறது. இதனால் நாம் வீடு போய்ச் சேரும்வரை நிம்மதி இன்றே பயணத்தை தொடர வேண்டியுள்ளது.

தூசு எழும்பிக் காணப்படும் இவ்வீதிகளினூடான பயணத்தினால் தமது உடைகள் மாசுபடுவதுடன் சுவாச நோய்களும் ஏற்படலாம் என அவர்கள அச்சம் தெரிவிக்கின்றனர்.

எது எப்படியாயினும் திருத்த வீதியின் ஓர் அந்தத்திலிருந்து மறு அந்தம் வரை பிரயாணிகள் பயப்பீதியுடனேயே பயணம் செய்கின்றனர் என்பதை மறுக்கமுடியாது. எனவே இது தொடர்பில் உரியவர்கள் தமது கவனத்தை செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-3)

# யாழ் - கிளிநொச்சி பேருந்துகளில் அதிகமான கட்டணம் அறவிடப்படுகிறதா?

## விசனம் கொள்கின்றனர் பயணிகள்

தனியார் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளிடம் பயணக்கட்டணத்தை விட அதிகளவான பணம் அறவிடப்படுவதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய முறையற்ற செயற்பாடுகள் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி பயணிக்கும் தனியார் பேருந்துகளிலேயே அதிகம் இடம் பெறுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இப்பயணத்திற்காக நிர்ணயக் கட்டணமாக ரூபா 100 நிர்ணயிக்கப்பட்டுள்ள போதும், பிரயாண பயணிகளிடம் 120/- - 130/- வரை அறவிடப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பயணிகளும், நடத்துனரும் பலமுறை வாக்குவாதப்பட்டதாகவும் இவ்விடயம் குறித்து உரிய தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட பயணிகள் தெரிவித்துள்ளனர். (ந-8)

# மின்தடை பற்றிய செய்தி

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயரமுத்த மற்றும் தாழ்அமுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர்அமுத்த மின்மார்க்கங்களை இணைப்பதற்காகவும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கரந்தன், நீர்வேலி, சிறுப் பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, பளை வரையான தென்மராட்சிப் பிரதேசம், சுன்னாகம், மல்லா கம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புத்தூர், ஆவரங்கால், வாதரவத்தை, வீரவாணி ஆகிய இடங் களிலும்

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், யாழ் மாநகரசபைப் பகுதி, யாழ் பட்டினப் பகுதி ஸ்ரான்லி வீதி, இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், அராலி, காரைநகர்ப் பிரதேசம், தீவகப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந-8)

# 4 கைக்குண்டுகள் புத்தளத்தில் மீட்பு

புத்தளம் உடையாவெளி பிரதேச குளமொன்றிலிருந்து 4 கைக்குண்டுகள் மீட்கப்பட்டதுடன் அவற்றை புத்தளம் 213ஆம் இராணுவப் பிரிவின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் நேற்று மாலை செயலிழக்கச் செய்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல்வேளை இக்குளப் புனரமைப்பு பணிகள் இடம் பெற்றுக் கொண்டிருந்த போது சேற்றுடன் இந்தக் குண்டுகள் காணப்பட்டுள்ளன.

இதனையடுத்து இங்கு இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு இக்கைக்குண்டுகள் செயலிழக்க செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ந-11)

# பாதுகாப்பு பொறுப்பு கோட்பாடு சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது

## ஐ.நாவிடம் இலங்கை முறைப்பாடு

பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற முறைமையை அரசியல் நோக்கங்களுக்காக எவரும் பயன்படுத்தக்கூடாது என இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் கோரியுள்ளது.

புவியியல் காரணிகளின் அடிப்படையில் பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற ஆயுதத்தை பயன்படுத்திக் கொள்வதோ அல்லது தெரிவு அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதோ ஏற்றுக் கொள்ளமுடியாது என ஐக்கிய நாடுகள் அமைப்புக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித ஹோகன்ன தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற கோட்பாடு சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாடுகளின் இறைமை பாதுகாக்கப்படவேண்டும் என்ற கோட்பாடு மிகவும் முக்கியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நல்லூர் கந்தனிடம் நேற்று

# பொதுநலவாய நாடுகளின் குழுவினர் தேங்காய் உடைத்து பிரார்த்தனை

பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நல்லூர் கந்தனுக்கு தேங்காய் உடைத்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 61பேர் கொண்ட குழுவினர் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கும் சென்றனர்.

இதன்போது நல்லூர் கந்தன் ஆலய முன்றலில் தேங்காய் உடைத்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

ஆலய முன்றலில் வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட தேங்காய்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடைத்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

தேங்காய் உடைப்பதற்காக வைக்கப்பட்டிருந்த கல்லில் தேங்காயை எறிய முற்பட்ட போதும் பலரினால் எறியப்பட்ட தேங்காய்கள் சேற்றினுள் பலமாக விழுந்த தோடு வேடிக்கை பார்த்த ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களின் உடைகளை சேறு பதம் பார்த்தது.

இதனால் அவர்கள் முகத்தை சுழித்தபடி அவ்விடத்தை விட்டு வெளியேறவே ஏனையவர்களும் வழிபாட்டை இடைநிறுத்திவிட்டு சென்றனர். (ந-6)


**செல்லா சினிமா- யாழ்ப்பாணம்**

இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு

ஜீவா, பூஜாஹெக்டே, நரேன் நடித்த



10.30, 2.30, 6.30, 9.30 D.T.S

(C-941)



**YAALH ENGLISH ACADEMY**

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

புதிய வகுப்புகள் : சனி 15.09.2012

- உத்தியோகத்தர்க்கு
- உயர் கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- பிறநாடு செல்பவர்க்கு
- தாய்மார்க்கு
- பாடசாலை மாணவர்க்கு

விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்

வகுப்பிட அனுசரணை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி : யாழ்நகர் (392)



**விற்பனைக்குண்டு**

**I. மோட்டார் சைக்கிள்**
1. NPVU - XXXX - PLEASURE 100cc
2. NPWI - XXXX - PULSAR 180cc

**II. உழவு இயந்திரம்** (MASSEY FERGUSON)
1. 36 SRI XXXX
2. 270 - XXXX
3. 49 - XXXX
4. 49 - XXXX
5. NPHF - XXXX

**III. கன்ரர்** 1. 40 SRI - XXXX

**IV. பஸ்** - (JOURNEY) 1. 29 - XXXX

மேற்குறிப்பிட்ட வாகனங்கள் உடன் விற்பனைக் குண்டு. தேவைப்படுவோர் திங்கள் – வெள்ளி காலை9.00 – மாலை 4.30 வரையான நேரத்தில் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

021-222 1898, 021-222 1900, 075-718 2184

இல. 74, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(C-1039)



**மக்கள் வங்கி அறிவித்தல்**

**அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை**

யாழ். பிராந்திய மக்கள் வங்கிக் கிளைகளில், எதிர்வரும் 15.09.2012 அன்று நடைபெற இருந்த அடகுநகை ஏல விற்பனை பிற்போடப்பட்டுள்ளது. ஏலவிற்பனைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2012.09.13.

(C-1040)



**நன்றி நவில்கின்றோம்**

29.07.2012 அன்று கிழக்கு மாகாணத்திற்கு நியமிக்கப்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரி இசை ஆசிரியர்களாகிய நாங்கள் 12 பேரும் அங்கு கடமையை பொறுப்பேற்பதில் இருக்கின்ற சிரமங்களை எடுத்துக் கூறிய போது அதனைக் கருத்தில் கொண்டு மத்திய கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு இன்றைய தினம் (14.09.2012) வடமாகாணத்தில் பணியாற்றுவதற்குரிய நியமனக் கடிதங்களை பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்ட



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும் வழிகாட்டியாக இருந்து செயற்பட்ட

வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுவிற்கும்

கோடான கோடி நன்றிகள்.

(421)

- தேசிய கல்வியியற் கல்லூரி பெண் இசை ஆசிரியர்கள் பன்னிருவர்



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது இளவாலைக் குடும்ப பாடசாலைகளில் ஒன்றாகிய

இளவாலை றோ.க.த.ஆண்கள் பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய

**செல்வி அன்ரனி சாந்தா மரியாம்பிள்ளை (SLPS 2 I)**



அவர்கள் 01.09.2012 ந் திகதி முதல் சங்கானைக் கல்விக் கோட்டத்தின் கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் மேன்மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர்கள்
(இளவாலைக் குடும்ப பாடசாலைகள்)

(420)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## காந்திய சிந்தனை!

1922– மார்ச் மாதம்– 18 ஆம் திகதி– ஒரு "மாபெரும் விசாரணை" ஆரம்பமானது. குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டவர் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவர் ஒரு வாக்குமூலம் கொடுத்தார்.

கடைசியாக அவர் என்ன சொன்னார் தெரியுமா?

"நீதிபதி அவர்களே! நீங்கள் செய்யக்கூடிய ஒரே காரியம் என்னவென்றால் நீங்கள் பதவியை விட்டு விலக வேண்டும். இல்லாவிடின் எனக்குக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும்" என்றார்.

இப்படிக் கூறியவர் யார் தெரியுமா? அவர்தான் மகாத்மா காந்தி.

ஒத்துழையாமை இயக்கம் நடந்தபோது "எங்கள் இந்தியா" என்ற பத்திரிகையிலே வெளியான மூன்று கட்டுரைகளுக்காக அரச எதிர்ப்புக் குற்றம்– என்று கூறிவிட்டு அவரையும் சங்கர் லால் பாங்கரையும் கைது செய்தார்கள்.

அப்போதுதான் இந்த விசாரணை இடம்பெற்றது.

காந்தியடிகளைப் பார்த்து நீதிபதி புரூம் பீல்ட் சொன்னார்; நான் இதுவரைக்கும் எத்தனையோ குற்றவாளிகளை விசாரித்திருக்கிறேன். இனிமேலும் விசாரிக்கப் போகிறேன். ஆனால், குற்றவாளிகளில் இருந்து நீங்கள் மாறுபட்டவராக இருக்கிறீர்கள்.

இலட்சக்கணக்கான மக்களுக்கு நீங்கள் மாபெரும் தலைவராக இருக்கிறீர்கள். உங்கள் கருத்துக்கு மாறுபட்டவர்கள் கூட உங்களுடைய உயர்ந்த கொள்கைகளையும் தவ வாழ்க்கையையும் பாராட்டுகிறார்கள்" என்றார்.

கடைசியாக தீர்ப்பு வழங்கும் போது... காந்திக்கு ஆறு வருட சிறைத்தண்டனை விதித்து விட்டு, "இந்த அரசாங்கம் எதிர்காலத்தில் உங்களுடைய தண்டனையின் அளவைக் குறைக்குமானால், என்னைவிட மிகுந்த மகிழ்ச்சி அடையக்கூடியவர்கள் வேறு யாரும் இருக்கமாட்டார்கள்" என்றார்.

காந்திஜி தென்னாபிரிக்காவிலே இருந்தபோது அவரை சிறையில் அடைத்தவர் "ஸ்மட்ஸ்". அவர் தன்னுடைய நூல் நிலையத்திலே இருந்த சில புத்தகங்களை எடுத்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காந்திஜிக்கு மிகவும் அக்கறையாக அனுப்பி வைப்பார்.

காந்திஜி சிறையில் இருக்கும் காலங்களில் பாதரட்சை ஜோடி ஜோடியாகத் தயார் செய்வார். தான் தயார் செய்து வைத்திருந்த பாதரட்சையை ஸ்மட்ஸ் தன்னை தரிசிக்க வரும் போது பரிசாக கொடுத்தனுப்புவார்.

இதை வாங்கிய ஸ்மட்ஸ் என்ன கூறுகிறார் தெரியுமா?

நான் சிறைக்கு அனுப்பிய அந்த மனிதனுடைய தாராள குணத்தை முதலிலே புரிந்து கொண்டவன் நான்தான்.

அவர் எனக்கு பரிசாகத் தந்தது வெறும் பாதரட்சைதான். இருந்தாலும் அதிலே என் காலை வைப்பதற்கு எனக்குத் துணிவே வரவில்லை.

இது தாராள குணத்தையும் அன்பையும் எடுத்துக் காட்டுகிறது என்று கூறினார். நீண்ட காலமாக அவர் கொடுத்த பரிசை ஞாபகச் சின்னமாகவே வைத்திருந்தார். விசேடமான நாட்களில் மட்டும்தான் அதை அவர் அணிந்து செல்வார்.

இப்படி தண்டனை கொடுத்தவருக்கு மனதையே நெகிழ வைக்க முடியுமென்றால் அது எப்படிப்பட்ட சக்தியாக இருக்க வேண்டும்? அந்த சக்தி காந்தியிடம் இருந்தது.

இதிலிருந்து நாம் ஒன்றைப் புரிந்து கொள்ளலாம். காந்திஜியிடம் எல்லோருடைய மனதையும் கொள்ளை கொள்ளும் சக்தி இருந்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.வர்த்தகர்களுக்கான அறிவுறுத்தல்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

காலாவதியான பொருட்களை விற்பனை செய்வதை வர்த்தகர்கள் முற்றாக தவிர்த்துக் கொள்வதோடு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்களை விற்பனை செய்வதை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும் என யாழ்.மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த சம்மேளனத்தால் துண்டுப்பிரசுரம் ஒன்றும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

குறித்த துண்டுப்பிரசுர விநியோகம் தொடர்பாக வர்த்தக சங்க மாநாட்டு மண்டபத்தில் நேற்று பத்திரிகையாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போதே வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரம் உள்ளிட்ட வர்த்தக சங்க பிரதிநிதிகளினால் வர்த்தகர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான இந்த துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டது.

அந்தத் துண்டு பிரசுரத்தில் யாழ்ப்பாண மாவட்ட வர்த்தகர்கள் தற்போதும் எதிர்காலத்திலும் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் பாதிப்புக்களில் இருந்தும் தங்களை விடுவிப்பதற்கான சில ஆலோசனைகள் யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனத்தினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

வர்த்தகர்கள் தங்களின் வருமானத்திற்கு ஏற்ப திட்டங்களை தொடங்குவது சிறந்தது.

வர்த்தகர்கள் வர்த்தக நடவடிக்கைகளிலும் முதலீட்டு நடவடிக்கைகளிலும் மற்றும் கடன்பட்டு தொடங்கும் நடவடிக்கைகளிலும் திட்டமிடல் இல்லாமல் எக்காரணம் கொண்டும் செயற்படுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும். எப்பொழுதும் வர்த்தகர்கள் நலன் சார்ந்த முதலீடுகள் மேற்கொள்ளப்படும் போது ஆலோசனைகளை பெற்றுச் செய்யுங்கள்.

வர்த்தகர்கள் அளவுக்கதிகமாக பொருட்களை கொள்வனவு செய்தலை தவிர்த்து தங்களது வர்த்தக ஸ்தாபனம் அமைந்துள்ள சூழலில் மக்களின் தேவைக்கு ஏற்ப பொருட்களைகொள்வனவுசெய்தல்சிறந்தது.

தற்போதைய வட்டிவீதம் நாட்டில் கூடியிருப்பதால் அதிகமாக கடன்பட்டு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்து கொண்டு வர்த்தக நடவடிக்கைகளுக்காக பெற்ற கடனை செலுத்துவதற்காக மீளவும் அதிக வட்டிக்கு கடன் படும் முறையை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

வர்த்தகர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் போது சட்டரீதியாக அதனை செயற்படுத்தல்.

விலை கட்டுப்பாடு, விலைப்பட்டியல் இடுதல் மற்றும் காலாவதியான பொருட்களை விற்பனை செய்தலை தவிர்த்தல் போன்றவற்றில் வர்த்தகர்கள் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்களை விற்பனை செய்வதை தவிர்த்துகொள்ளல் வேண்டும்.

நீங்கள் வியாபார நடவடிக்கைகளின் போது காசோலை வழங்கி தங்களின் வங்கிக் கணக்கில் பணம் பற்றாக்குறை காரணமாக காசோலை திரும்பும் பட்சத்தில் உடனடியாக காசோலைக்கு பணம் செலுத்தி காசோலையை திரும்ப பெற்றுக் கொள்ளவும்.

ஏனெனில் தற்போது காசோலை மோசடி சம்பந்தமான பிரச்சினைகளுக்கு சட்ட நடவடிக்கைகள் மிக கடுமையாகவும் இறுக்கமாகவும் உள்ளதால் திரும்பிய காசோலையை திரும்ப பெற்று உங்களை பாதுகாத்து கொள்ளுங்கள் என யாழ்ப்பாண மாவட்ட வர்த்தகர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுவதற்காக வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ–6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60-90 | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 60 | 70 |
| தக்காளி | 60 | 40 | 50 | 65 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 45 | 50 |
| கோவா | 70 | 60 | 70 | 60 |
| கரட் | 80 | 100 | 100 | 130 |
| பூசணி | 30-40 | 20 | 40 | 50 |
| புடோல் | 20-25 | 30 | 30 | 50 |
| வாழைக்காய் | 60 | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 40 | 60 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 50 | 70 | 70 |
| பாகற்காய் | 60 | 60 | 60 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 70 | 90 |
| பயற்றங்காய் | 50 | 40 | 70 | 60 |
| லீக்ஸ் | 80 | 110 | 100 | 100 |
| பீற்றூட் | 60 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 70 | 60 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 15-20 | 30 | 50 | 60 |
| போஞ்சி | 70-75 | 80 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 40 | 60 |
| கீரை – 1 பிடி | 10 | 10 | 10 | 20 |
| தேசிக்காய் | 140 | 300 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 30 | 25 | 20-25 |

# இராசி பலன்

14.09.2012
(ஆவணி 29, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
திரயோதசி முற்பகல் 10.24 மணிவரை
மகம் பின்னிரவு 4.31 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
வல்லிபுர ஆழ்வார் கொடியேற்றம்.

**மேடம்** பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், வருங்கால நலன் கருதி சேமிக்க நினைப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் நாள், புத்திரரால் நன்மையுண்டு.

**இடபம்** வாகன யோகத்தால் வளம் காணும் நாள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் அதிகரிக்கும், வழிபாடு முன்னேற்றம் தரும், தன வரவில் இருந்த தடைகள் அகலும், ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரும்.

**மிதுனம்** நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், குடும்பப் பொறுப்புகள் கூடும், சகோதர ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், செய்தொழிலில் மேன்மையுண்டு.

**கடகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைதூரச் செய்திகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**சிங்கம்** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர், போசன சுகமுண்டு.

**கன்னி** வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், உணர்ச்சிவசப்படும் சூழ்நிலை உருவாகலாம், சுப நிகழ்வுகளுக்காக ஒரு தொகையைச் செலவு செய்யும் நிலையுண்டு, அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள்.

**துலாம்** திடீர் பண வரவால் மகிழ்ச்சியடைவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்** உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வருவர், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உற்சாகமான நாள்.

**தனுசு** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், உடல் உழைப்பால் உயர்வடைவீர்கள், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாடுகளால் திருப்தி காண வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.

**கும்பம்** கோயில் வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரும்.

**மீனம்** நல்லவர்கள் தொடர்பால் நன்மைகள் நடைபெறும் நாள், அலுவலகப் பணிகள் துரிதமாகும், பழைய பாக்கிகள் வசூலாகலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், ஆரோக்கியமான நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 61 பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்திற்கு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் வருகை தந்த இந்தக் குழுவினரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

பின்னர் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் விளக்கப்பட உதவியுடன் ஆளுநரின் செயலாளரினால் விளங்கப்படுத்தப்பட்டது. இதன்பின்பு பொது நலவாய நாடுகளின் பாராளு மன்ற உறுப்பினர்களும் கேள்விகளை எழுப்பியிருந்தனர். பின்னர் யாழ். பொதுநூலகத்திற்கு சென்ற இந்தக் குழுவினர்களுக்கு அங்கு கலாசார முறைப்படி வரவேற்பளிக்கப்பட்டதோடு நூலகத்தின் வரலாறும் விளங்கப்படுத்தப்பட்டது. பின்னர் நல்லூர் கந்தன் ஆலயத்தில் தேங்காய் உடைத்து வழிபாட்டிலும் ஈடுபட்டனர்.

(படங்கள்:- எஸ்.கரன், என்.குமார்)

# வடமராட்சி தெற்கு மேற்கில் உள்ள 226 குட்டைகள் பராமரிக்கப்படுவதில்லை

## வட தெ/மே.ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 226 குளங்களை (குட்டைகள்) பராமரிக்க கமநல சேவைத்திணக்களம் முன் வருவதில்லை என மக்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயற்குழுக் கூட்டத்தில் இக்குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கரவெட்டி கமநல சேவை திணைக்களத்திற்கு சொந்தமான 226 குளங்கள் பராமரிப்பு இன்றி சேறும் சுரியுமாகவும் பழுதடைந்த நிலையிலும் காணப்படுகின்றன.

இதனால் அதனை நம்பியுள்ள விவசாயிகள் மற்றும் விலங்கினங்கள் அதனை பயன்படுத்த முடியாதுள்ளது.

எனவே, இக்குளங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையிடம் பாரப்படுத்துமாறு பிரதேச சபை உறுப்பினர்கள் கோரினர்.

இதற்கு பதிலளித்த கமநல சேவை பிரதிநிதி கமநல சேவைத் திணக்களத்திற்கு சொந்தமான எந்தப் பொருளையும் வேறு திணைக்களத்திற்கு கையளிக்க முடியாது எனவும் வேண்டுமென்றால் கமநல சேவை திணைக்களத்தின் அனுமதியைப் பெற்று குளங்களை புனரமைக்க பிரதேச சபையை முன்வருமாறு கேட்டுக் கொண்டார்.

மேலும் இந்நிலைப்பாட்டினால் பாதிக்கப்படுவது மக்களும் விவசாயமும் விலங்குகளுமே என சபையில் மக்கள் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். (அ-3-24)

# இந்திய புடைவை வியாபாரிகளால் எமது புடைவை வியாபாரம் பாழ்

## நெல்லியடி வர்த்தக சங்கம் குற்றச்சாட்டு

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்தில் இந்திய புடைவை வியாபாரிகளின் அதிகரிப்பினால் தமது உள்ளூர் புடைவை வியாபாரங்கள் பாதிப்படைந்துள்ளதாக நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் அகிலதாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயற்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு பிரதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனை சுட்டிக்காட்டினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது உள்ளூர் வியாபாரிகள் அரசாங்கத்திற்கு வருமானவரி, மின்சாரக்கட்டணம், கடை வாடகை மற்றும் ஏனைய பொதுச் செலவுகளுக்கு தாம் நிதி செலுத்திக் கொண்டிருக்கும் வேளை எதுவிதமான வரியும் இன்றி இந்திய புடைவை வியாபாரிகள் வியாபாரம் செய்வதனால் தமது தொழில் மிகவும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் ஒரு பிரதேசத்தில் வர்த்தக அனுமதிப்பத்திரம் இன்றி தொழில் செய்ய முடியாது. அவ்வாறு இருக்க பொலிஸார் இந்திய வியாபாரிகளின் செயற்பாட்டை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் அதிகளவான இந்திய வியாபாரிகள் விசாக்காலம் முடிவுற்ற நிலையிலும் இங்கு தங்கி நின்று புடைவை வியாபாரம் செய்வதாகவும் இதனைத் தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-3-24)




# கடலில் காணாமல் போன மீனவர் கண்டுபிடிக்கப்பட்டார்

(கரவெட்டி)

வடமராட்சி கடற்பரப்பில் காணாமல்போன மீனவர் நேற்று அதிகாலை வடமராட்சி கடற்பரப்பில் (20 பாகம்) வைத்து கடற்படை மற்றும் மீனவர்களினால் மீட்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி பொலிகண்டி கடற்பரப்பில் கடந்த 11 ஆம் திகதி இரு மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் சென்று கரை திரும்பிக் கொண்டிருந்தனர்.

இவ்வேளை, மீனின் நிறை அதிகமானதால், படகை கரைக்கு செலுத்த முடியாமல் போயுள்ளது.

இதனால் காணாமல்போன மீனவரை படகில் நிறுத்தி விட்டு சக மீனவர் வேறொரு படகின் மூலம் கரைக்கு திரும்பியுள்ளார்.

பின் குறித்த மீனவரைத் தேடி சக மீனவர்கள் படகில் சென்றவேளை அவ்விடத்தில் மீனவரையும் படகையும் காணவில்லை.

இவரை தேடும் பணிக்காக 20 இற்கு மேற்பட்ட மீனவர் படகும் கடற்படையினரின் படகுகளும் ஈடுபட்டன.

இதனை அடுத்து நேற்று அதிகாலை வடமராட்சி கடற்பரப்பு பின் 20 பாகத்தில் படகுடன் தத்தளித்துக் கொண்டிருந்த வேளை குறித்த மீனவரை மீட்டு கரைக்கு கொண்டு வந்ததாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-3-24)

# பருத்தித்துறை இ.போ.சபையில் ஆளணிப்பற்றாக்குறை நிலவுகிறது

## பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

(கரவெட்டி)

பருத்தித்துறை இ.போ.ச.பேருந்து சபையில் ஆளணி பற்றாக்குறை காரணமாக பேருந்துகள் சேவை ஈடுபட முடியாத நிலையில் காணப்படுகிறது. இதனால் மக்களுக்கு உரிய போக்குவரத்து சேவைவயை வழங்க முடியாதுள்ளதாக இ.போ.ச. பொதுமுகாமையாளர் எஸ்.கந்தசாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

செயற்குழுக் கூட்டத்தில் மக்களின் பிரதிநிதிகள் பேருந்து சேவை தமக்கு சீராக கிடைப்பதில்லை எனவும் உரிய நேரத்திற்கு தாம் செல்ல வேண்டிய இடங்களுக்கு செல்ல முடியாதுள்ளதாகவும் குறிப்பிட்ட இடங்களுக்கு பேருந்து சேவை இடம்பெறுவதில்லை எனவும் சுட்டிக்காட்டி முகாமையாளரிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த இ.போ.ச. பொதுமுகாமையாளர் இ.போ.சபையிடம் இருக்கும் பேருந்துகளையும் ஆளணிகளையும் வைத்துக் கொண்டே மக்களுக்கு தாம் பரந்த சேவைகளை செய்து வருவதாகவும் மக்களுக்கு தம்மாலான பேருந்து சேவைகளை தமது பணியாளர்கள் சிறந்த முறையில் வழங்கி வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

இருந்தபோதும் ஒருசில குறைபாடுகளை தாம் ஏற்பதாகவும் அதை எதிர்காலத்தில் சீரமைத்து பேருந்துகளும் ஆளணிகளும் நிறைவாக கிடைக்கும் போது தமது சேவையை மக்களுக்க சிறந்த முறையில் வழங்க தாம் தயாராக உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-3-24)

# வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறல்

## மீனவர்கள் குற்றச்சாட்டு

(கரவெட்டி)

வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் மீண்டும் அதிகரித்துள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் ரோலர் படகுகள் வடமராட்சி மீனவர்களின் வலையை அறுத்து சேதப்படுத்துவதுடன் மீனவர்களையும் அச்றுத்தலுக்கு உள்ளாக்கி வருகின்றன.

இந்நிலையில் கடற்படையினர் இந்திய ரோலர் படகுகளை விரட்டுகின்ற போதிலும் அதனையும் பொருட்படுத்தாமல் இந்திய ரோலர் படகுகள் அத்துமீறி வடமராட்சி கடற்பரப்பில் மீன்பிடி தொழிலில் ஈடுபடுகின்றன.

இதனால் தமது பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் தினம் சேதமாக்கப்படுவதுடன் தொழிலும் பாதிக்கப்படுகிறது. இதனால் எமது வாழ்வாதாரம் தொடர்ந்தும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாக மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக்கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# யாழின் அபிவிருத்தி கண்டு பிரதிநிதிகள் அதிர்ச்சி

யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களைக் கண்டு பொது நலவாய நாடுகளின் பிரதிநிதிகள் ஆச்சரியப்பட்டனர் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பினையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்கு கொள்வதற்காக இலங்கை வருகை தந்துள்ள வெளிநாட்டுப்பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர். யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலைகண்டு தமது ஆச்சரியத்தை அவர்கள் வெளியிட்டனர். அத்தோடு வேகமாக அபிவிருத்தி கண்டு வருகிறது இந்தப் பிரதேசம் எனவும் தெரிவித்தனர் என்றார். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைக்குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

புத்தளம் உடையார்வெளி குளத்திலிருந்து குறைந்தபட்சமாக 7 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. குளத்திலிருந்து சேறுகளை அகற்றியபோது கைக்குண்டுகள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இந்த கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9)

# எம்மை ஏன் புறக்கணித்தீர்; கப்பூது கிராமமக்கள் குமுறல்

(கரவெட்டி)

வடமராட்சி கப்பூது கிராமமானது எதுவித முன்னேற்றமுமின்றி புறக்கணிகப்படும் கிராமமாக உள்ளதாக அக்கிராமத்தில் வசிக்கும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யுத்தத்திற்கு முன்னர் தமது கிராமத்தில் அதிகளவான மக்கள் வாழ்ந்ததாகவும் தமது கிராமம் மிகச் செழிப்புடன் இருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால், இன்று அக்கிராமத்தில் 20 இற்கு உட்பட்ட குடும்பங்களே மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருவதாக அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இருக்கும் எமக்கு அரச திணைக்களங்கள், கல்விச் செயற்பாடு, பிரதேச செயலக செயற்பாடுகள், பிரதேச சபை செயற்பாடுகள் என்பன தமக்கு உரிய முறையில் கிடைப்பதில்லை.

இதன் காரணமாக அப்பகுதி மக்கள் கரவெட்டி பகுதிகளில் அதிகமாக வசித்து வருவதோடு மீண்டும் தமது கிராமத்திற்கு வர விரும்பவில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எமது கிராமம் மீளவும் செழிப்றுடன் இருக்க அரச அதிகாரிகளின் முனைப்பான செயற்பாடு தேவையாகவுள்ளது.

எனவே, உரிய அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு தமக்கு உதவ முன்வர வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)


**Cambridge Management College**

வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு French, Doutch, ஆகிய மொழிகளில் இலகுவாகப் பேச, எழுத, வாசிக்க, கற்பிக்கப்படுகின்றன.
மற்றும் IELTS, English, IT, Sinhala கற்க விரும்புவர்களுக்கான பிரதியேக வகுப்புகளும் நடைபெறுகின்றன.
6-13 வயது வரையான சிறுவர், சிறுமியர்களுக்கு ICT, English வகுப்புகளும் நடைபெறுகின்றன.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், (கச்சேரி பஸ்நிலையம் அருகில்)
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com


## குளவி கொட்டியதில் 31 பெண்கள் காயம்

(கொழும்பு)

ஹப்புத்தளை பிரதேச தோட்டமொன்றில் தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண்கள் மீது குளவி தாக்கியதில் 31 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹப்புத்தளை எஸ்டேட்டுக்கு உட்பட்ட 5 மற்றும் ஆறாம் பிரிவுகளைச் சேர்ந்த தோட்டப் பகுதிகளில் வேலை செய்து கொண்டிருந்தவர்களே சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குளவிகளுக்கு பயந்து ஓடும் போது தவறி விழுந்தவர்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர். (அ-9)

# 15 அடி உயர பிள்ளையார் சிலை மட்டக்களப்பில் உருவாக்கம்

ஆவணிச் சதுர்த்தியை கொண்டாடும் முகமாக வாழும் கலையானது பிள்ளையாரின் 15 அடி உயர சிலையை மட்டக்களப்பில் உருவாக்கி வருகின்றது. இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கானோர் இங்கு வருகை தரவிருக்கிறார்கள்.

இதனை அமைப்பதன் முக்கிய நோக்கம் இளைஞர் மாணவர் மற்றும் சிறுவர்களை வாழ்க்கையில் ஒரு பெரிய உயரிய இலட்சியத்தை நோக்கி செல்லவைப்பதற்காகும்.

அத்தோடு மட்டுமல்லாது எதனையும் 100 வீதம் செய்ய ஊக்குவிப்பதாகும். இது வாழும் கலையின் சிறுவர்கள் பிரிவை ஊக்குவிக்க செய்யும் ஒரு கலைப்படைப்பாகும்.

இதனை ஹட்டனைச் சார்ந்த கலை நிபுணர் மணிமாறன் மிகவும் பிரமிக்க தக்க வகையில் உருவாக்கி வருகின்றார்.

இம் மாதம் 19 ஆம் திகதி ஆவணி சதுர்த்தி விழாவானது இப் பதினைந்து அடி விநாயகர் சிலையுடன் வாழும் கலையின் நம்பிக்கை கிராமம், சவுக்கடி வீதி (காமாட்சி அம்மன் கோவில் வீதி மயிலம்பவெளியில் கோலாகலமாக கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை தொடரவுள்ளது. தினமும் முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை தரிசனம் இடம்பெறும். மேலதிக விபரங்களுக்கு 0773117525 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (அ-9)

## விண்ணப்பம் கோரல்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கிலச் சான்றிதழ் கற்கை நெறியினை பயிலும் மாணவர்களுக்கான மூன்றாவது மீட்டல் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும். எனவே இக்கற்கை நெறியை பயிலும் மாணவர்கள் அனைவரும் அன்றைய தினம் தவறாது பரீட்சைக்கு தோற்றும்படி யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தினால் ஆங்கிலச் சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். இக்கற்கை நெறிக்கு 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்க முடியும் என யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கையர் மீதான தாக்குதலால் விமானக் கம்பனிகளுக்கு நட்டம்

(கொழும்பு)

இந்தியாவின் தஞ்சாவூரில் இலங்கை யாத்திரிகர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னர் கொழும்பிலிருந்து திருச்சிக்கு விமான மூலம் பயணம் மேற்கொள்வோரின் எண்ணிக்கை கணிசமாக குறைவடைந்துள்ளது. இதனால் ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ், மிஹின் லங்கா ஆகிய விமானக் கம்பனிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கி வருவதாக தெரிய வருகின்றது.

இக்கம்பனிகள் திருச்சிக்கான தமது விமான சேவையை மேலும் விஸ்தரிக்க திட்டமிட்டிருந்த வேளையில் இலங்கை யாத்திரிகர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ், மிஹின் ஏயார் லைன்ஸ் ஆகியவற்றின் வருமானம் பெரும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இந்தியாவுக்கு யாத்திரை மேற்கொள்ளும் சிங்கள யாத்திரிகர்கள் முதலில் கொழும்பிலிருந்து திருச்சிக்கு பயணமாகினர். இவர்கள் பின்னர் திருச்சியிலிருந்து பௌத்த தலங்களான புத்தகாயா், சர்னாத் ஆகிய பகுதிகளுக்கும் பயணித்தனர்.

இப்பயணத்தின்போது இவர்கள் பல இந்துக் கோவில்களையும் தரிசித்துச் சென்றனர். இப்போது இவர்கள் கொழும்பிலிருந்து திருச்சி செல்லும் திருவனந்தபுரத்துக்கு விமானத்தில் பயணிக்கின்றனர் என்றும் குறிப்பிடப்படுகிறது.

இதேபோல கொழும்புக்கு வரும் தமிழ் நாட்டு சுற்றுலாப் பயணிகள் இப்போது சிங்கப்பூர் அல்லது கோலாலம்பூருக்கு செல்கின்றனர். இதனால் இலங்கை சுற்றுலாத் துறையும் பாதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1981 இந்து<br>நட்சத்திரம்:-பூரம் 4<br>உயரம்:-5'<br>கி.பா:-9.25<br>தொழில்:-சொந்த மருந்து விற்பனை நிலைய உரிமையாளர்<br>B/411 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூஷம் 4<br>உயரம்: 5'4"<br>கி.பா:-28.25, 11 இல் செவ்வாய்<br>தொழில்:-Bsc IT நிகழ்ச்சியாளர்<br>G/445 |
| பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அனுஷம் 2<br>உயரம்:-5'11"<br>கி.பா:-36.5<br>தொழில்:-தனியார் நிறுவன முகாமையாளரும் நகைக்கடைப்பங்காளரும்<br>B/416 | பிறப்பு:- 1983 இந்து வேளர்ளர்<br>நட்சத்திரம்:- பூரட்டாதி 2<br>உயரம்: 5'4"<br>கி.பா:-41.45<br>தொழில்:- UK Student Visa (Bsc)<br>G/467 |
| பிறப்பு:-1981 இந்து செங்குந்தர்<br>நட்சத்திரம்:-அச்சுவினி 4<br>உயரம்:-5'6"<br>கி.பா:-49<br>தொழில்:-விற்பனைப் பிரதிநிதி (தனியார்)<br>B/418 | பீறப்பு:- 1990 இந்து வேளாளர்<br>நட்சத்திரம் :மூலம் 2<br>உயரம்: 5'2"<br>கிரகபாவம்: 34.75, 1 இல் செவ்.<br>தொழில்:-GAQ மாணவி<br>G/472 |
| பிறப்பு:- 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரட்டாதி 2<br>உயரம்:-5'7"<br>கி.பா:-20, 4 இல் செவ்வாய்<br>தொழில்:-அரச கணக்காளர்<br>B/420 | பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூசம் 1<br>உயரம்: 5'2"<br>கி.பா:- 6.45, 12 இல் செவ்<br>தொழில்:- AAT<br>G/480 |


சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி



"மெகா ரீயூணர்சின்" நெறிப்படுத்தலில்
கிருபா லேணர்ஸ்சின்
இசைத் தேர்வு

வடமாகாணத்தில் இலைமறைகாய்களாக இருக்கும் எமது கலைஞர்களை வெளிக்கொணரும் நோக்கில் இந்திய முன்னணி கலைஞர்களின் விருப்புடன் மெகாரியூணர்சின் நெறிப்படுத்தலில் கிருபா லேணர்ஸ் நடாத்தும் மாபெரும் இசைத்தேர்வு

12.09.2012 - 30.09.2012 இடையில் விண்ணப்பதாரிகள் அருகில் உள்ள **கிருபாலேணர்ஸ்** காரியாலயத்திற்கு சென்று தங்களது விண்ணப்ப படிவத்தை பெற்று பூர்த்தி செய்வதன் மூலம் தேர்வில் பங்கு கொள்ளலாம்.

இறுதித் தேர்வில் கலந்து சிறப்பிக்கும் மன்மதராசா புகழ் இசைஅரசன்
தீனாவினால்
தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்கு இந்திய பின்னணி பாடகர்களுடன் பாடுவதற்கான வாய்ப்பு.....

தொடர்புகளுக்கு (சி/1041)
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 2224350
சுன்னாகம் 021 2242022 | பருத்தித்துறை 021 4923201 | சாவகச்சேரி 021 2270700
நெல்லியடி 021 3006550 | கிளிநொச்சி 021 2285505 | விசுவமடு 021 3201515
மேலதிக தொடர்புகளுக்கு 077 2702400


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம் தாக்கி இளைஞர் பலி

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூரில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை பலியாகியுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விளைஞன் வீடொன்றில் தொழிலில் ஈடுபட்ட வேளையில் மின்சாரத் தாக்குதலுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் காலில் செருப்பு அணிந்திருக்கவில்லையெனவும், இவ்வீட்டின் மாடியில் நீர் தேங்கி நின்றதாவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பித்த நிலையில், இப்பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி மின்சாரம் தாக்கியதால் ஏற்பட்ட மரணமெனக் கூறி சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (அ-9)

# இலங்கையின் அனுபவங்களை பாக். கும் பெற்றுக் கொள்ள விருப்பம்

## பாகிஸ்தான் எம்.பி.நபீஷா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயகத்தைப் பலப்படுத்தல், அரசியல் ஸ்திரத்தன்மை போன்ற இலங்கை பெற்றுள்ள அனுபவங்களை பாகிஸ்தானும் பெற்றுக் கொள்வது தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பாகிஸ்தானின் பாராளுமன்ற உறுப்பினரும் பொதுநலவாய பாராளுமன்ற ஒன்றியத்தின் நிறைவேற்றுக் குழுவின் உபதலைவருமான கலாநிதி நபீஷா ஷா தெரிவித்துள்ளார்.

அமரர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களை சந்தித்து பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பெற்றுக் கொண்டுள்ள அனுபவங்களைக் கொண்டு பாகிஸ்தானிலும் ஜனநாயகத்தை பலப்படுத்தல்,மனித உரிமைகள், அரசியல் ஸ்திரத்தன்மை போன்றவற்றை ஏற்படுத்தல் தொடர்பாக இலங்கையின் சபாநாயகர் சமல் ராஜபக்ச, பிரதி சபாநாயகர் சந்திம வீரக் கொடி ஆகியோருடன் பேசப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

58 ஆவது பொதுநலவாய பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வருகை தந்திருந்த அவர் முதல் முறையாக சபாநாயகர், பிரதி சபாநாயகர் ஆகியோரை சந்தித்து உரையாடினார். அதன் பின்னரே அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

மாநாட்டின் முதல் நாளன்று இலங்கையின் ஜனாதிபதி உரையாற்றிய போது, சில நாடுகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக மனித உரிமைகள் என்ற பதத்தைப் பிரயோகிக்க வேண்டாம் என்று கூறினார். இதனை பெரிதும் வரவேற்பதாக அவர் தெரிவித்தார். 30 வருடகாலமாக இலங்கையில் பிரச்சினை இருந்து வந்தது. இதனை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பல பிரயத்தனங்களை இலங்கை அரசு எடுத்திருந்தது. பேச்சு வார்த்தைகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது. சர்வதேச மத்தியஸ்தத்தையும் அழைத்திருந்தது. இறுதியில் யுத்தம் மூலம் பிரச்சினைக்கு முடிவு காணப்பட்டது. அவசியமான வேளையில் அவசியமான உதவிகளை எமது பாகிஸ்தான் அரசும் செய்தது என்றார். உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் விடயத்திலும்,அகதிகள் விடயத்திலும் இலங்கை அரசு பல சவால்களை எதிர்கொண்டது.

மீளக்குடியேற்றம், அபிவிருத்தி முன்னெடுப்புகள் குறித்தும் பல முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன. எவர் வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் சென்று பார்க்க முடியும். வெளிப்படையாக உள்ளது என்றும் இலங்கையின் ஜனாதிபதி கூறியிருக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

## தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும் மதுபானசாலைகள் அகற்றப்படவில்லை

(கரவெட்டி)

நெல்லியடி நகரப்பகுதியிலுள்ள மதுபான விற்பனை நிலையங்களை வேறிடத்திற்கு மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் 6 மாதங்களுக்கு மேலாகியும் நிறைவேற்றப்படவில்லை என சமூகப்பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வடமராட்சி தெற்கு மேற்குப்பிரதேச செயற்குழுக் கூட்டத்தில் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டது.

நெல்லியடி நகரப்பகுதியில் மூன்று மதுபானசாலைகள் இயங்கி வருவதாகவும் இளம் தலைமுறையினர் இதனால் மதுவுக்கு அடிமையாகும் நிலையும் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் அம்மதுபான்சாலைகள் மக்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளிலே அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் மதுபான விற்பனை நிலையங்கள் உரிய இடத்தில் அமைக்கப்படாமையால் அதனை இடமாற்றுமாறு மக்களின் பிரதிநிதிகள் கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி இடம்பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினர்.

இதனை அடுத்து இடமாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் மதுவரித்திணைக்களமும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையும் இந்நடவடிக்கையை எடுக்க வேண்டுமெனவும் அச்செயற்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் இன்றுவரை அம்மதுசாலை நிலையங்கள் தொடர்ந்தும் அவ்விடத்தில் இயங்கி வருவதனால் பெரும் பாதிப்புகளை மக்கள் எதிர்கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (அ-3-24)

## சிந்தாத்திரை மாதா வருடாந்தப் பெருவிழா

(வேலணை)

வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா திருத்தல வருடாந்த பெருந்திருவிழா கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பூஜைவழிபாடுகள் நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை இரவு நற்கருணை வழிபாடும் நாளை சனிக்கிழமை காலை திருநாள் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

இதில் நாட்டின் அனைத்து பகுதி மக்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)



யாழ்/கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக்கட்டடத் தொகுதி திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் திருமதி எஸ். சகாதேவன் மாணவி ஒருவருடன் இணைந்து மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். செல்வராஜா மாணவன் ஒருவருடன் இணைந்து நாடாவெட்டி கட்டடத்தைத் திறந்து வைப்பதையும் அருகில் நல்லூர் கோட்டக்கல்விப்பணிப்பாளர் என். மாணிக்கராஜா நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

## வணிகவிழா போட்டி

கிளிநொச்சி வணிகவிழா போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி வலய பாடசாலை மாணவர்களிடையே வணிகத்துறை சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பாடசாலை மட்டத்தில் இப்போட்டிகள் நடத்தப்பட்டு வலய மட்டத்தில் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்துள்ளார்.

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டியில் பிரிவு 1 இல் தரம் 10 மாணவர்களும் பிரிவு 2 இல் தரம் 11 மாணவர்களும் பிரிவு 3 இல் க.பொ.த உயர்தர மாணவர்களும் பங்குபற்றவுள்ளனர். பேச்சு, கட்டுரை, குறுவினாப்போட்டி ஆகியவை கடந்த யூலை மாதம் பாடசாலை மட்டத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-3-84)

## சு. உத்தியோகத்தர் தரம் II "ஆ" பிரிவுக்குரிய திணைக்கள பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

குடும்ப சுகாதார உத்தியோகத்தர் தரம் II "ஆ" பிரிவுக்குரிய திணைக்களப்பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக யாழ். சுகாதார சேவைகள் பணிமனை பிரதி பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.சிவராணி அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை சிறுப்பிட்டி ANC & WBC கிளினிக், அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையிலும், 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி கிழக்கு ANC & WBC கிளினிக், கைதடி PMCU இலும், 19 ஆம் திகதி புதன்கிழமை புத்தூர் PMCU, உரும்பிராய் PMCU இலும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை [illegible] ANC & WBC கிளினிக், அளவெட்டி பிரதேச வைத்தியசாலையிலும் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. (அ-9)

## ஐ.தே.க.உறுப்பினருக்கு ஆளும் தரப்பு அழுத்தம்

(கொழும்பு)

பல்வேறு சலுகைகள் வழங்குவதாகக் கூறி, தம்முடன் இணையுமாறு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனக்கு அழுத்தம் கொடுப்பதாகத் திருமலையிலிருந்து ஐ.தே.க. சார்பாக கிழக்கு மாகாண சபைக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள இம்ரான் மஹ்ரூப் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதை தான் நிராகரித்ததாகவும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைவதாக வெளியான செய்திகள் பொய்யானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சலுகைகளை பகிரங்கப்படுத்தும் நிலையில் தான் இல்லை என ஆளுங்கட்சியினால் வழங்கப்பட்ட முன்வந்ததாக கூறப்படும் சலுகைகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவியதற்கு அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரான எனது தந்தை ஏ.ஜி.எஸ். மஹ்ரூப் மேற்கொண்ட சேவைகளை கட்சி மாறாமல் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக இருந்து மேற்கொள்ளவுள்ளேன் என அவர் தெரிவித்தார். இந்த மாகாண சபை தேர்தலில் 10 ஆயிரத்து 45 வாக்குகளை பெற்று மாகாண சபை உறுப்பினராக இவர் தெரிவு செய்யப்பட்டதாக தெரிய வருகின்றது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ-9 வீதியில் பயணிக்கும் சாரதிகள் சமிக்ஞைகளை கவனிக்கவேண்டும்

ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரை (ஏ9 வீதியில்) வீதிப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதால் இவ்வீதியின் ஊடாகப் பயணிக்கும் வாகனச் சாரதிகள் கவனமாக வாகனங்களைச் செலுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

வீதியில் முன்னெடுக்கப்படும் நிர்மாணப்பணிகள் குறித்து சாரதிகள் கவனம் செலுத்துவதுடன் இந் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் வேலையாட்களின் பாதுகாப்புக் குறித்தும் சாரதிகள் அவதானமாகச் செயற்படவேண்டும் என்றும் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி டி சில்வா விடுத்திருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நிர்மாணப் பணிகள் காரணமாக ஏ9 வீதியில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் சமிக்ஞைப் பலகைகளுக்கு மதிப்பளித்து சாரதிகள் செயற்படவேண்டும் என்றும் வீதி மீறல்கள் மற்றும் சட்டமீறல்களில் ஈடுபடும் வாகனச்சாரதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம் ஏ9வீதியின் இரு மருங்கிலும் அடர்ந்த மரங்கள் காணப்படுவதால் வீதிக்குக் குறுக்காக விலங்குகள் செல்லக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதால் அது குறித்தும் அவதானமாக இருக்குமாறும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வீதியில் அதிக வேகத்துடன் வாகனம்செலுத்துவது மற்றும்மது போதை அல்லது சுகவீனமுற்ற நிலையில் வாகனங்களைச் செலுத்துவதையும் தவிர்க்குமாறும் வடமாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் காமினி டி சில்வா விடுத்திருக்கும் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# கொழும்பில் டெங்கை கட்டுப்படுத்த விமானம் மூலம் பக்றீரியா விசிறல்?

(கொழும்பு)

டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் கொழும்பு மாவட்டத்தில் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் விமானம் மூலம் பீ.ரி.ஐ பக்றீரியா நுண்ணுயிர் விசிறப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேனவுக்கும் இலங்கைக்கான கியூப நாட்டுத் தூதுவர் நிர்சியா கெஸ்ரோ ஹெவேராவுக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே கொழும்பு மாவட்டத்தில் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் பீ.ரி.ஐ பக்றீரியா விமானம் மூலம் விசிறுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது என்று சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதன்படி கொழும்பு மாநகர சபை மற்றும் தெஹிவளை, நுகேகொட பிரதேசங்கள் மாடி வீட்டுத் தொகுதிகளை உள்ளடக்கிய பகுதிகள் ஆகியவற்றில் முன்னோடி திட்டமாக பீ.ரி.ஐ பக்றீரியா விமானம் மூலம் விசிறப்படும் எனவும் அவ்வதிகாரி கூறினார்.

இந்த வேலைத்திட்டத்திற்கு தேவைப்படும் பீ.ரி.ஐ பக்றீரியாவை துரிதகதியில் பெற்றுத்தருமாறு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கியூப தூதுவரிடம் கேட்டுள்ளார்.

இதன்படி ஒக்டோபர் மாத இறுதி வாரத்தில் இத்திட்டம் செயுற்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

இவ்வருடத்தின் முதல் எட்டு மாத காலப்பகுதியிலும் டெங்கு நோய்க்கு உள்ளானவர்களில் 46-56 வீதமானோர் மேல் மாகாணத்தை சேர்ந்தவர்களே. இதனை கருத்திற் கொண்டே பீ.ரி.ஐ. பக்றீரியாவை விமானம் மூலம் விசிறுவதற்கு முடிவு செய்யப்பட்டதாகவும் அவ்வதிகாரி மேலும் கூறினார். (அ-2)

# 130 மில்லியன் செலவில் வாகனத் தரிப்பிடம் அமைப்பு

ஏழு மாடிகளைக்கொண்ட வாகன தரிப்பிட கட்டடம் ஒன்று இலங்கை மத்திய வங்கி வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

நூறு வாகனங்களை ஒரே நேரத்தில் நிறுத்தி வைக்கும் வகையில் சகல வசதிகளையும் கொண்டதாக இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக 130 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாதுகாப்பு மற்றம் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டி வைத்தார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திஸாநாயக்க, போக்குவரத்து அமைச்சின் செயலாளர் தம்மிக்க பெரேரா, கொழும்பு பிரதேச செயலாளர் கமல் பத்மசிறி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமல் பேரேரா, மத்திய வங்கி பிரதி ஆளுநர் பி.டி. டபிள்யூ.டி.சில்வா உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

1996 ஆம் ஆண்டு புலிகளால் குண்டு வைத்து தகர்க்கப்பட்ட இடத்திலேயே இந்த ஏழு மாடி களைக் கொண்ட வாகன தரிப்பிட கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. (அ-2)




★1752- கிரிகோரியன் நாட்காட்டியை பிரித்தானியா ஏற்றுக் கொண்டது. இதன்படி புதிய நாட்காட்டியில் 11 நாட்களை அது இழந்தது. முன்னைய நாள் செப்டெம்பர் 2 ஆகும்.

★1812-நெப்போலியனின் படைகள் மொஸ்கோவினுள் நுழைந்தன. ரஷ்யப் படைகள் நகரை விட்டு விலகியதும் மொஸ்கோவில் தீ பரவ ஆரம்பித்தது.

★1829- ஒட்டோமன் பேரரசு ரஷ்யாவுடன் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. ரஷ்ய துருக்கியப் போர் முடிவுக்கு வந்தது.

★1847-மெக்சிக்கோ நகரத்தை வின்ஃபீல்ட் ஸ்கொட் தலைமையிலான அமெரிக்கப் படைகள் கைப்பற்றினர்.

★1886- தட்டச்சுப் பொறியின் நாடா கண்டு பிடிக்கப்பட்டது.

★1901-அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் மக்கின்லி செப் 6 இல் இடம்பெற்ற கொலை முயற்சியின் பின்னர் இறந்தார்.

★1917- ரஷ்யா அதிகாரபூர்வமாகக் குடியரசானது.

★1954- சோவியத் ஒன்றியம் அணுவாயுதச் சோதனையை மேற்கொண்டது.

★1959- சோவியத்தின் லூனா 2 விண்கலம் சந்திரனில் மோதியது. சந்திரனில் இறங்கிய மனிதனால் அமைக்கப்பட்ட முதலாவது விண்கலம் இதுவே.

★1960- எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (ஒபெக்) உருவாக்கப்பட்டது.

★1962-கொங்கோ மக்களாட்சிக் குடியரசில் இராணுவத் தளபதி ஜோசப் மோபுட்டு இராணுவப் புரட்சியை மேற்கொண்டு பிரதமர் பத்திரிசு லுமும்பாவை அரசு பதவியில் இருந்து கலைத்தார்.

★1982-லெபனானின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பசீர் ஜெமாயெல் படுகொலை செய்யப்பட்டார்.

★1999- கிரிபட்டி, நௌரு, டொங்கா ஆகியன ஐ.நா. அவையில் இணைந்தன.

★2000-எம்.எஸ். டொஸ் கடைசித் திருத்தம் வெளியிடப்பட்டது.

★2003-சுவீடனில் இடம்பெற்ற மக்கள் வாக்கெடுப்பில் யூரோ நாணயத்தை ஏற்றுக் கொள்ளும் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

★2005-நடிகர் விஜயகாந்த் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் என்ற புதிய அரசியற் கட்சியை ஆரம்பித்தார்.

### பிறப்புக்கள்

★1853-சேர்.பொன் அருணாசலம், இலங்கையின் தேசியத் தலைவர் (இ.1924)

★1939-சோ. பத்மநாதன், ஈழத்து எழுத்தாளர்

★1965-டிமித்ரி மெட்வடேவ், ரஷ்யாவின் மூன்றாவது ஜனாதிபதி

★1973-நாஸ், அமெரிக்க ராப் இசைக் கலைஞர்

### இறப்புக்கள்

★1901-வில்லியம் மக்கின்லி, ஐக்கிய அமெரிக்காவின் 25 ஆவது ஜனாதிபதி (பி.1843)

★1982-பசீர் ஜெமாயெல், லெபனான் ஜனாதிபதி (பி.1947)

### சேர் பொன்னம்பலம் அருணாசலம்



பொன்னம்பலம் அருணாசலம் சேர். பொன். அருணாசலம் எனப் பொதுவாக அறியப்பட்டவர். அவர் இலங்கையின் தேசியத் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர்.

#### வாழ்க்கைக் குறிப்பு

பொன்னம்பலம் அருணாசலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள மானிப்பாயைச் சேர்ந்த கேட் முதலியார் என அழைக்கப்பட்ட பொன்னம்பல முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் (சேர் முத்து குமாரசுவாமியின் சகோதரி) மூன்றாவது மகனாக 1853 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி பிறந்தார். குமாரசாமி முதலியார், சேர். பொன்.இராமநாதன் ஆகியோர் இவரது சகோதரர்கள்.

இவரது தாய் மாமனாரான சேர்.முத்துக்குமாரசுவாமியின் கண்காணிப்பில் கொழும்பிலேயே வளர்ந்தார். கொழும்பு றோயல் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். இங்கு கல்வி கற்றபோது 1870 இல் ராணி புலமைப் பரிசிலையும் பெற்று லண்டன் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கிறைஸ்ட் கல்லூரியில் கலைமாணிப் பட்டம் பெற்றார். பவுண்டேஷன் புலமைப்பரிசிலைப் பெற்று கணிதத்திலும் புராதன இலக்கியத்திலும் சிறந்த சித்திகளைப் பெற்றார்.

இவரது மனைவியின் பெயர் சுவர்ணம் நமசிவாயம். அவரும் மானிப்பாயைச் சேர்ந்தவர். எட்டு பிள்ளைகள் பத்மநாபன் அருணாசலம், அருணாசலம் மகாதேவா, அருணாசலம் இராமநாதன் ஆகிய ஆண்பிள்ளைகள், மகேஸ்வரி செகராசசிங்கம், மனோன்மணி பத்மநாதன், பத்மாவதி பரராஜசிங்கம், சிவானந்தம் தம்பையா, சுந்தரி நடராஜா ஆகிய ஐந்து பெண் பிள்ளைகள். இவர்களில் பத்மநாபன், மகேஸ்வரி, மனோன்மணி, பத்மாவதி ஆகியோர் அருணாசலம் மறைவதற்கு முன்பே இறந்து விட்டனர்.

#### அரச சேவை

இங்கிலாந்தில் பாரிஸ்டர் ஆகவும் 1875 ஏப்ரலில் சிவில் சேவை உத்தியோகத்தேர்வில் சித்தி பெற்ற முதல் இலங்கையராகவும் இலங்கை திரும்பினார். 1913 ஆம் ஆண்டு வரை அரசாங்க சேவையில் பல்வேறு உயர் பதவிகளை வகித்தார். முதலில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பணியாற்றிய இவர் கண்டி பொலிஸார் நீதிமன்றத்திலும் தொடர்ந்து இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள நீதிமன்றங்களிலும் அலுவலராகப் பணிபுரிந்தார்.

இவரது அரசாங்க சேவையைப் பாராட்டி ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் பங்கிங்ஹாம் அரண்மனையில் வைத்து இவருக்கு சேர் பட்டம் வழங்கினார்.

#### மறைவு

1924 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி தனது 71 ஆவது வயதில் மதுரை மீனாட்சியம்மன் ஆலயப் பிரதேசத்தில் காலமானார்.


#### நினைவுச் சின்னங்கள்

1930 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 ஆம் திகதி அரசாங்கசபை மைதானத்தில் (தற்போதைய ஜனாதிபதி செயலகம்) தேசாதிபதியால் அருணாசலத்தின் வெண்கலச்சிலை திறந்து வைக்கப்பட்டது. இவரது உருவப்படங்கள் றோயல் கல்லூரி சமூக சேவைச் சங்கம், இலங்கைத் தேசிய காங்கிரசின் தலைமை அலுவலகம் என்பவற்றில் திறந்து வைக்கப்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழக மண்டபம் ஒன்றிற்கு அருணாசலத்தின் பெயரும் சூட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதார உதவித் திட்டங்களை உரியமுறையில் பயன்படுத்துங்கள்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



வாழ்வாதாரத்திற்காக கிடைக்கப்பெறும் உதவித்திட்டங்களை பயனாளிகள் உரிய முறையில்பயன்படுத்தி அதன் உச்சபயன்களை பெற்றுக் கொள்ள வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமுர்த்தி திட்டத்தின் குலுக்கல் முறை மூலம்தெரிவு செய்யப்பட்ட 36 பயனாளிகளுக்கான ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் சமுர்த்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் குலுக்கல் முறை மூலம் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான தற்போதைய அரசு முன்னைய அரசுகளை போலல்லாது பாரபட்சமின்றி செயற்பட்டு வருகின்ற நிலையில் தவறுகள் ஏதும் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் அவற்றை நாம் திருத்திக் கொள்ளவும் தயாராகவிருக்கின்றோம். யுத்தத்தின் பின்னரான இக்காலப்பகுதியில் அரசு பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் சமுர்த்தி குலுக்கல் முறை மூலம் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் கிடைக்கப் பெறும் இவ்வாறான உதவிகள் மூலமாக தமது வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்ளக்கூடிய வகையில் சரியான முறையில் அவற்றை பயன்படுத்தி மேம்பாடடைய வேண்டும்.

அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேந்திரன், மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மோகனேஸ்வரன், பிரதேச செயலர் உள்ளிட்ட துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டனர். (அ-6-9)

# வவு.தமிழ்ச்சங்கத்தின் —பாரதியார் விழா—

(பூந்தோட்டம்)

வவுனியா தமிழ்ச்சங்கத்தின் பாரதி விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலய கலா மண்டபத்தில் தமிழ் சங்கத்தின் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாரதியார் பாடல்களை அடக்கியதாக **நமக்கு தொழில் கவிதை** என்ற தொனிப்பொருளில் இசையரங்கினை யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் ந.பரந்தாமன், திருமதி சிவவதனி பரந்தாமன் ஆகியோர் பாட வல்லிபுரம் கணேசதாசன் தபேலாவும் திருமதி வேல்விழி சூரியகுமார் வயலினும் இசைக்கவுள்ளனர்.

இவ்விழாவின் இறுதி நிகழ்வாக வவுனியா பிரதேச செயலாளரும் கவிஞருமான அ.சிவபாலசுந்தரனை நடுவராக கொண்டு **மெல்லத் தமிழினிச் சாகும் என்ற ஏக்கம் கனவாகிக் கலையுமா? நிஜமாகி நிலைக்குமா?** என்ற தலைப்பில் இடம்பெறவுள்ள பட்டிமன்றத்தில் கனவாகி கலையும் என்ற தரப்பில் சி.வரதராஜன், கோ.தர்மபாலன், ச.க.தியாகலிங்கம் ஆகியோரும் நிஜமாகி நிலைக்கும் என்றதரப்பில் திருமதி த.நிறைமதி, வீ.பிரதீபன், ச.கருணாகரன் ஆகியோரும் வாதாடவுள்ளனர்.

அத்துடன் தமிழ்சங்கத்தின் வளர்ச்சிக்கு பங்காற்றும் வாணி கணனி பதிப்பகத்தின் நிறுவுநர் பொ.செல்வநாயகம் கௌரவிக்கப்படவுள்ளார். (அ-9-266)

# வீதி உணவு விற்பனையாளர்கள் ஒழுக்க முறையை பின்பற்ற வேண்டும்

## சுகாதார அமைச்சு அறிவுறுத்தல்

நாடு பூராகவும் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்குட்பட்டவர்கள் வீதியோர வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக சுகாதார அமைச்சின் போசாக்கு பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வாறான வர்த்தகர்கள் தமது உணவு தயாரிப்பு நடவடிக்கைகளின் போது உரிய உணவு ஒழுக்க முறைமைகளை பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏராளமான வீதி உணவு விற்பனையாளர்கள் உரிய முறையில் உணவு தயாரிப்பில் ஈடுபடுவதில்லை என ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சில உணவு விற்பனை நிலையங்களில் பல நாட்களான கோழி இறைச்சி, ப்ரைட் ரைஸ் என்பன விற்பனை செய்யப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக முதலில் உணவு பாதுகாப்பு தொடர்பாக வர்த்தகர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டு அது தொடர்பான சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (அ-2)

# கிழக்கில் தமிழரொருவர் முதலமைச்சராக தெரிவாகாவிடின் கூட்டமைப்பே பொறுப்பு

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபையில் ஆட்சியமைப்பது தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட வேண்டும். கிழக்கில் தமிழர் முதலமைச்சர் வருவது தவிர்க்கப்படுமானால் அதற்கான முழுப்பொறுப்பையும் தமிழ்க் கூட்டமைப்பே ஏற்க வேண்டும் என மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, கிழக்கு மாகாணசபை தேர்தல் வன்முறைகளற்று சிறந்த முறையில் நடந்து முடிந்தது. கிழக்கு மாகாண சபை தேர்தல் அமைதியாகவும் வன்முறைகளற்ற வகையிலும் இடம்பெற்றதானது எமது மக்களின் அரசியல் நாகரிகத்தை இன்று பறைசாற்றியுள்ளது.

இன்று எமது சமூகம் பலத்த சவாலை எதிர்நோக்கியுள்ளது. இன்று எமது இனம் பிழைவிடுமானால் அது எமது சமூகத்தை பாரிய பின்னடைவுக்கு இட்டுச்செல்லும் என்பதை இன்று வெற்றிபெற்றுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உணர வேண்டும்.

இன்று கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் பல்வேறு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பில் எமது சமூகத்தின் வாக்குகளை பெற்று இன்று வெற்றி பெற்றுள்ளோர் சிந்திக்க வேண்டும்.

இது தொடர்பில் சிந்தித்து அரசுக்கு ஆதரவினை வழங்கி கிழக்கில் தமிழ் முதலமைச்சர் ஒருவரை பெற்றுக்கொள்வதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்வர வேண்டும். தமிழ் மக்களின் உரிமையை காப்பாற்ற போகின்றோம் என கூறும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கிழக்கில் முதலமைச்சரை பெற்றுக் கொள்ள அரசுடன் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் பல்வேறு அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட எமது சமூகம் தொடர்ந்து பின்னிலைக்கு செல்லக்கூடாது. இது தொடர்பில் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றோர் சிந்திக்க வேண்டும்.

அதனை விடுத்து கடந்த காலங்களை போன்று மீண்டும் மீண்டும் பேசிப்பேசி எமது சமூகத்தை படுகுழியில் தள்ள முனைய வேண்டாம் என்று அவர்களை அன்பாக கேட்டு கொள்கின்றேன் என தெரிவித்தார். (அ-2)

# தமிழக பயண தடையுத்தரவு விரைவில் தளர்த்தப்படும்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை யாத்திரிகள் தமிழ்நாட்டுக்கு செல்வது தொடர்பாக தற்போது விதிக்கப்பட்டுள்ள தடையுத்தரவு விரைவில் நீக்கப்படுமென ஊடக மற்றும் தகவல் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றையதினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பாக இந்திய பாதுகாப்பு அதிகாரிகளுடன் தற்சமயம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு சென்ற யாத்திரிகர்கள் அங்கு தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து மக்களின் பாதுகாப்பு நலன்கருதி இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு செல்வதை இலங்கை அரசாங்கம் தடை செய்தமை தெரிந்ததே.

இந்த தடையுத்தரவு எப்போது தளர்த்தப்படுமென செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் இத்தகவலை தெரிவித்தார். (அ-2)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 317 பேர் கைது

நேற்று முன்தினம் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 317 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.பி. அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டோரில் 268 பேர் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் செலுத்தியவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் குடிபோதையில் இருந்த தனியார் பஸ் சாரதி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். எதிர்வரும் நாட்களிலும் நாடு முழுவதும் குடிபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகள் கைது செய்யப்படுவர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தாக்குதலுடன் தொடர்புடைய நபர்களை உடன் கைது செய்யுங்கள்

(கொழும்பு)

இராணுவ புலனாய்வு பிரிவின் மேஜர் ஒருவரை அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா மற்றும் துருக்கிக்கான இலங்கை தூதுவர் பாரதி விஜேரத்னவின் மகன் ரொஹான் விஜேரத்ன ஆகியோர் தாக்கியமை தொடர்பாக கடும் ஆத்திரமடைந்துள்ளதாக தெரியவருகின்றது.

இதனால் அவர்களை உடனடியாக கைது செய்யுமாறு கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினருக்கு உத்தரவிட்டதாக குறிப்பிடப்படுகிறது.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவிற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க அமைச்சர் மேர்வின் சில்வாவுடன் பேணி வரும் நெருக்கமான தொடர்பு காரணமாகவே இவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை என கூறப்படுகிறது.

இதனையடுத்து பிரதிப்பொலிஸ்மா அதிபரை தனது அலுவலகத்திற்கு அழைத்த பாதுகாப்பு செயலாளர் குறித்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரையும் தகுதி, தராதரம் பாராது உடனடியாக கைது செய்யுமாறு உத்தரவிட்டதாக தெரிய வருகின்றது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# இலங்கை வரலாறு

40



செங்கை ஆழியான்

# அக்கபோதி மன்னர்கள்



அபயகிரி குருமடத்தின் சிதைவுகள்

ஜெத்ததீசன்

ஜெத்ததீசன் அனுராதபுரத்தின் மணிமுடியைத் தரித்துக் கொண்டான். வழமைபோல விகாரைகளுக்கு தானமும் பணமும் வழங்கினான். கிராமங்களை விகாரைகளுக்குத் தானமாக அளித்தான். இந்தியாவிற்குத் தப்பியோடிய ஶ்ரீசங்கபோதி, அங்கு கரந்துறைந்த உறவினரையும் வேறு படையினரையும் சேர்த்துக் கொண்டு மீண்டுவந்தான். இதனை அறிந்த ஜெத்ததீசன், காலவாவியில் சேனையைச் சந்தித்துத் தோல்வியுற வைத்தான். மீண்டும் இந்தியாவிற்குத் தப்பியோடிய ஶ்ரீசங்கபோதி வாடகைக்கு அமர்த்திய தமிழ் வீரர்களுடன் இலங்கைக்குத் திரும்பினான். மீண்டும் அப்பகுதியில் இருபடைகளும் மோதின. அதில் ஜெத்ததீசனின் படை தோல்வியைக் கண்டது. தத்தாசிவனின் நிலைமையைப் புரிந்து கொண்டு, இந்தியாவிற்குத் தப்பியோடினான். பல தமிழ் வீரர்களை ஜெத்ததீசன் வெட்டிக் கொன்ற போதி லும், வேலப்பா என்ற தமிழர் படைத் தளபதி தன்னை நெருங்கி வருவதைக் கண்டான். உடனே வெற்றிலைப் பெட்டிக்குள் இருந்த தனது கத்தியால் தன் தொண்டையை அறுத்துத் தற்கொலை செய்து கொண்டான். அச்செய்தியைக் காவி வந்த தூதுவனிடம், "மன்னன் எவ்வாறு இறந்தான்? எனக் காட்டுக" என மகாராணி வினவ, தூதுவன் அவள் முன் அமர்ந்து, மண்டியிட்டுதன் கத்தியால் "இவ்வாறே" எனத் தன் கழுத்தை அறுத்து இறந்து வீழ்ந்தான். ராணியும் இருதயம் உடைந்து மரணமானாள். ஜெத்ததீசனின் ஆட்சி ஆக ஐந்து மாதங்களே நிலவியது.

ஶ்ரீசங்கபோதி (அக்கபோதி) மீண்டும் அனுராதபுரத்தின் அரியணை ஏறினான். அவனது மகனும், யுவராஜனுமாகிய மானா, அரசனின் மனைவியருடன் குற்றம் செய்தமைக்காக அவனைக் கொலை செய்வித்தான். அதன்பின் தனது இளைய சகோதரனான காசியப்பன் என்பவனை உபராஜாவாக்கினான். இந்தியாவில் கரந்துறைந்த தத்தாசிவன், தமிழ் வீரர்களைத் திரட்டிக்கொண்டு இலங்கைக்கு வந்து, ஶ்ரீசங்கபோதியை வெற்றி கொண்டான். ஶ்ரீசங்கபோதி அனைத்துச் செல்வங்களையும் இழந்து அரச சின்னமான கழுத்து மாலையுடன் இந்தியாவுக்கு ஓடித் தப்பினான். அதன் பின்னர் தத்தாசிவன் அனுராதபுரத்தின் மன்னனாக முடிதரித்துக் கொண்டான். சிம்மாசனப் பெயராக தத்தோபதீசன் என நாமம் பூண்டான்.

தத்தோபதீசன்

தத்தோபதீசன் ஆட்சி [illegible] மக்களின் [illegible]யது. நாடு உள்நாட்டு போர்களினால் பஞ்சம் பசிக்குள்ளாகியது. தத்தோபதீசனுக்கு இந்திய மன்னர்கள் ஆக்கிய பணிகளை இவன் தலைகீழாக்கினான். மூன்று பெரும் விகாரைகளிலும், தாதுகோபங்களிலும் உள்ள அனைத்துத் திரவியங்களையும் தனதாக்கிக் கொண்டான். தங்கச் சிலைகளை உருக்கித் தனது தேவைக்குரியதாக்கினான். சேத்தியங்களுக்கு வழங்கிய ஆபரணங்கள் அனைத்தையும் பறிமுதல் செய்தான். தூபராமதூபிக்கு இடப்பட்டிருந்த பொன்கூரையைக் கவர்ந்து உருக்கித் தனதாக்கினான். பெருந்தூபியிலிருந்த (ருவான் வெலிசய) விலைமதிப்பற்ற இரத்தினங்களைக் கவர்ந்து கொண்டான். நாட்டிலிருந்து நெல்லைக் கப்பலில் ஏற்றி தமிழ் வீரர்களுக்குத் தாரை வார்த்தான். தமிழ் வீரர்கள் அரசனின் அரண்மனை, தாதுவீடுகள் என்பவற்றை அழித்தனர்.


எனினும் ஶ்ரீசங்கபோதி (அக்கபோதி) மீண்டும் திருப்பிவந்து, போரிட்டு, அனுராதபுர அரசினைத் தனதாக்கிக் கொண்டான். அவ்வேளை அவனது யுவராஜாவான காசியப்பன் தூபராமசேத்தியத்தினை உடைத்து வீழ்த்தி, அங்கிருந்த செல்வங்க்ளைக் கொள்ளையிட்டான். அவை இலங்கையின் முதல் மன்னன் தேவநம்பிய தீசனால் அழிக்கப்பட்டவை. தக்கிண விகாரையையும் உடைத்து, அங்கிருந்த செல்வங்களையும் காசியப்பன் கொள்ளையடித்துக் கொண்டான். இவ்வாறு பல விகாரைகளை உடைத்துக் கொள்ளையிட்டான். இவனது தவறான செயற்பாடுகளை, மன்னனால் தடுத்துநிறுத்த முடியவில்லை. எனினும், தூபராம தூபியை மீண்டும் புதுப்பித்துக் கொடுக்கவே மன்னனால் முடிந்தது.

மீண்டும் ஶ்ரீசங்கபோதி, தத்தோபதீசனால் துரத்தியடிக்கப்பட்டான். ஶ்ரீசங்கபோதி இம்முறை உருகுணைக்குத் தப்பியோடி அங்கு படைத் திரட்டலில் ஈடுபட்டான். ஆனால், அங்கு நோய்வாய்ப்பட்டு மரணமடைய நேர்ந்தது. எனினும் யுவராஜாவான காசியப்பன் உருகுணையிருந்து படையுடன் வந்து தத்தோபதீசனை இந்தியாவிற்குத் துரத்திவிட்டான். அதன் பின்னர் தன்னை அரியணைக்குரியவனாகப் பிரகடனப்படுத்திக் கொண்டான். முன்னர் பௌத்தசேத்தியங்களுக்கு ஆற்றிய கொடுமைகளுக்குப் பிராயச்சித்தமாக விகாரைகளுக்கு பல்வேறு தானங்களை வழங்கினான்.

இந்தியாவிலிருந்து இன்னொரு படையுடன் தத்தோபதீசன் இலங்கை வந்து, காசியப்பனோடு பொருதித் தோல்வி கண்டான். இந்த யுத்தத்தில் தத்தோபதீசன் கொல்லப்பட்டான். ஆனால், அவனோடு வந்த அவனது மருமகன் தத்தோபதீசன் (மருமகனுககு மாமன் பெயரே வழங்கியது) இந்தியாவுக்குத் தப்பிச் சென்றான்.

காசியப்பன்

போரில் வெற்றிபெற்ற காசியப்பன் சமயப்பணிகளில் முழுமூச்சுடன் செயற்படத் தொடங்கினான். காசியப்பனுக்குப் பல புதல்வர்கள் இருந்தனர். மூத்தவன் மாணகா ஆவான். அவனது புதல்வர்கள் சிறுவர்களாக இருந்தமையால், தனக்குப் பின் இந்த அரசையும், தன் பிள்ளைகளையும் வழிநடத்தத்தத் தகுந்த ஒருவன் தேவை என மன்னன் உணர்ந்து, தன் சகோதரி மகனான மானா என்பவனை உருகுணையிலிருந்து அழைப்பித்தான். ஒன்பது வருட ஆட்சி நிறைவில் காசியப்பன் மரணமடைந்தான். (தொடரும்)



இலங்கையில் முதன்முதல் அமைக்கப்பட்ட விகாரை- தற்போது

(தேவநம்பிய தீசனால் மகிந்ததேரருக்காக அமைக்கப்பட்டது)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மிருக பலியை தடுக்க நாடாளுமன்றில் சட்டம்

## ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் நாட்டுக்கும் ஆசி வேண்டியே முன்னேஸ்வரம் காளி கோவிலில் மிருக பலி நடத்தப்படுவதென்றால் அதனை தொலைக்காட்சிகளில் ஒளிபரப்ப வேண்டுமெனவும் மிருக பலியை தடுப்பதற்கு மிக விரைவில் பாராளுமன்றத்துக்கு சட்ட மூலமொன்றை கொண்டு வரவுள்ளதாகவும் ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய குழு உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை சிங்கள பௌத்த நாடு. பௌத்த மதம் மட்டுமல்ல. இந்து மதமும் மிருக பலியை அனுமதிக்கவில்லை. மிலேச்சத்தனமான, காட்டுமிராண்டித்தனமான மிருக பலியை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

இதனை தடுப்பதற்கு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டோம். மக்களை தெளிவுபடுத்தினோம். நீதிமன்றம் சென்றோம். ஆனால், முடியாமல் போய் விட்டது. எனவே, இலங்கையில் மிருக பலியை தடுப்பதற்காக பாராளுமன்றத்திற்கு சட்ட மூலமொன்றை கொண்டு வரவுள்ளோம்.

அத்தோடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் மீண்டும் கோரிக்கை விடுக்கின்றோம். இந்த மிருக பலி நடத்தப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும். பொறுப்புள்ளவர்கள் இவ்விடயத்தில் தலையிட வேண்டும். ஜனாதிபதிக்கும் நாட்டுக்கும் ஆசி வேண்டியே மிருக பலி நடத்தப்படுவதாக முன்னேஸ்வரம் காளி கோவில் பூசகர்கள் தெரிவிக்கின்றனர். அப்படியானால் மிருக பலி இடம்பெறும் தினத்தன்று அங்கு என்ன நடக்கின்றது என்பது மக்களுக்கு தெரிய வேண்டும்.

எனவே, ஊடகவியலாளர்களை அனுமதிக்க வேண்டும். அங்கு இடம்பெறும் நிகழ்வுகளை மக்கள் தொலைக்காட்சிகள் மூலம் பார்ப்பதற்கான நடவடிக்கைகளை கோவில் நிர்வாகத்தினர் முன்னெடுக்க வேண்டும். இந்தச் சவாலை கோவில் நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்ளத் தயாரா என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (அ-2)

# ஐக்கிய நாடுகளின் கொள்கைகளை பொதுநலவாயம் பின்பற்றக்கூடாது

## கோருகிறார் அமைச்சர் பீரிஸ்

அங்கத்துவ நாடுகளின் சுயாதீன விவகாரங்களில் திணிப்புகளை மேற்கொள்வதில் ஐ.நாவின் நடத்தையை பொதுநலவாயம் பின்பற்றக்கூடாது என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

லஷ்மன் கதிர்காமர் ஞாபகார்த்த நினைவு தினம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் நினைவுப்பேருரை நிகழ்த்திய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொதுநலவாயமானது ஐ.நாவிலிருந்து வேறுபட்டது. எனவே, ஐ.நாவின் கொள்கைகள், நடத்தைகளை பொதுநலவாயம் பின்பற்றினால் அது பாரிய தவறாகிவிடும். பொதுநலவாயத்தின் தன்மைக்கு புறம்பான செயற்பாடுகளை அதன்மீது சுமத்த முயற்சிப்பதானது இந்த அமைப்பின் அடிப்படை கொள்கைகளை ஆபத்தில் தள்ளக்கூடும் என அவர் தெரிவித்தார்.

பொதுநலவாயமானது அரசுகளுக்கிடையிலான தன்னார்வ அடிப்படையில் இணையக்கூடிய ஓர் அமைப்பாகும். எனவே, அது ஏனைய நாடுகளின் செயற்பாடுகள் தொடர்பாக தீர்ப்பளிக்கும் தோரணையை ஏற்படுத்துவது சரியானதோ சாத்தியமானதோ அல்ல என அவர் கூறினார். என்ன செய்ய வேண்டும் என ஏனைய நாடுகளை பணிக்கும் நிலைப்பாட்டை பின்பற்ற முடியாது என அவர் தெரிவித்தார். (அ-2)

# பொதுநலவாய மாநாட்டை தமிழ்நாடு புறக்கணித்தது

தமிழ்நாடு, புதுச்சேரியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடாளுமன்றச் சங்கத்தின் கூட்டத்தை புறக்கணித்துள்ளனர்.

கொழும்பில் ஆரம்பமாகியுள்ள பொதுநலவாய மாநாட்டில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவும் பங்கேற்றுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ஆரம்பித்து வைக்கும் இந்தக் கூட்டத்தை புறக்கணிக்குமாறு தமிழ்நாடு அழைப்பு விடுத்திருந்த போதிலும் இந்தியா பெரியதொரு குழுவை கொழும்புக்கு அனுப்பியுள்ளது.

எனினும் இந்தியாவின் நாடாளுமன்றக் குழுவில் தமிழ்நாடு, புதுச்சேரி, கர்நாடக மாநிலங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் எவரும் இதில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சட்டவிரோத ஆஸி. விஜயத்திற்கு புலி ஆதரவாளர்களே காரணம்

## ஆஸி. அதிகாரிகளிடம் கூறினார் பீரிஸ்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு ஆட்களை அழைத்து செல்லும் நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்களே மேற்கொண்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அண்மையில் அவுஸ்திரேலியாவின் பிரதிநிதிகளைச் சந்தித்து இந்த ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருப்பதாக தெளிவுப்படுத்தியதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய பிரதிநிதிகளும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளதுடன் சட்டவிரோத அகதிகளை கட்டுப்படுத்துவதற்கு இலங்கை கடற்படையினர் வழங்கி வருகின்ற ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

அத்துடன் எதிர்காலத்தில் இலங்கையில் இருந்தோ அல்லது வேறு சர்வதேச நாடுகளில் இருந்தோ அவுஸ்திரேலியாவுக்கு அநாவசிய அகதிகள் வராதிருப்பதாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவுஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்ததாக பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஓசோன் பாதிப்பை ஏற்படுத்தும் இயந்திரத்தை இறக்குமதி செய்ய தடை

## சுற்றாடல் அமைச்சு தகவல்

ஓசோன் படலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வாயுக்களுடன் கூடிய இயந்திரங்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியை தடை செய்வதற்கான திட்டமொன்றை சுற்றாடல் அமைச்சு தயாரித்துள்ளது.

ஓசோன் படலத்திற்கு பாதிப்பை விளைவிக்கும் இயந்திரங்களை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் உத்தேசித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் டி.எம்.யூ.ரி. பஸ்நாயக்க கூறியுள்ளார்.

இதற்கமைய குளிர்சாதனப்பெட்டி மற்றும் குளிரூட்டிகளுக்கு ஓசோன் படலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வாயுக்கள் பயன்படுத்தப்படுவதை தடுப்பது குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

ஓசோன் படலத்தை பாதுகாப்பதற்கான செயற்றிட்டமொன்றை முன்னெடுப்பதற்காக சர்வதேச ஓசோன் செயலகத்தின் அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# மின்வெட்டு அமுலாக்குவதற்கு மழை இன்மையே காரணம்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

அனல்மின் நிலையம் அமைப்பது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் மின்சார தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் அனல் மின் நிலையத்தை அமைப்பதா இல்லையா என்பதனை அரசாங்கம் இன்னமும் தீர்மானிக்கவில்லை. அனல் மின் நிலையமொன்றை அமைப்பதற்கான சாத்தியங்கள் தொடர்பில் சாத்திய ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் பணிகள் பூர்த்தியானால் நாட்டின் மொத்த மின்சார தேவையின் 60 வீதத்தை பூர்த்தி செய்ய முடியும். மழையில்லாத காரணத்தினால் மின்சார வெட்டு அமுல்படுத்த நேரிட்டதாகவும் இதற்குதம்மையோ சீன அரசாங்கத்தையோ அல்லது மின்சார சபையையோ குறை கூறுவதில் அர்த்தமில்லை என்றார். (அ-2)

# மாகாண சபை தேர்தல் தாக்குதல்; இருவர் பலி

(கொழும்பு)

வடமத்திய மாகாண சபைத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர் குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த ஒருவர் உயிரிழந்துள்ளதாக பேர்டி பிரேமலால் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி இரவு இம்மோதல் ஏற்பட்டது எனவும் இதில் மூவர் காயமடைந்து அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அதில் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தேர்தல் காலத்தில் ஐ.ம.சு.மு. வேட்பாளர்களான பேர்டி பிரேமலால் திஸாநாயக்க மற்றும் எஸ்.எம்.ரஞ்சித் ஆகியோரின் ஆதரவாளர்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த எஸ்.எம்.ரஞ்சித்தின் ஆதரவாளர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். (அ-2)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையின் கரங்கள் அமைப்பினர் போரில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் நலிவுற்ற மாணவர்களுக்கான மருத்துவம், கல்வி ஊக்குவிப்பிற்கான இம் மாத ஆரம்பக் கொடுப்பனவு கடந்த 10 ஆம் திகதி ஒரு தொகுதி மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நிறுவனப் பணிப்பாளர் பரமசாமி சந்திரமோகன் பாதிக்கப்பட்ட மாணவிக்கு கொடுப்பனவை வழங்குவதையும் வெங்கடேஸ்வரா துவிச்சக்கர வண்டி விற்பனை முகவர் பாதிக்கப்பட்ட மாணவனுக்கு துவிச்சக்கரவண்டி ஒன்றினை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# மாகாண தேர்தலில் தெரிவானோரை வெளியிடும் நடவடிக்கை தாமதிக்கும்

நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்று மாகாண சபைகளுக்கு தெரிவான உறுப்பினர்களின் விபரங்களை வர்த்தமானியில் அறிவிக்க மேலும் தாமதமாகும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாகாணசபை உறுப்பினர்களின் விபரங்கள் நேற்றைய தினம் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று முன்னதாக அறிவிக்கப்பட்டது. எனினும் சில உறுப்பினர்கள் தங்களின் சொத்து விபரங்கள் வழங்க தவறி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இந்த வர்த்தமானி அறிவித்தல் மேலும் தாமதமாகும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சொத்து விபரங்கள் குறித்த தகவல்களை உறுப்பினர்கள் வழங்கிய தன் பின்னர் இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# யாழ்.நகரின் அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரத்தை மேலும் அபிவிருத்தி செய்து அழகுபடுத்துவது தொடர்பில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்தறிந்து கொண்டார்.

யாழ். நகரின் பண்ணைப் பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற் கொண்ட அமைச்சர் அங்கு மேற்கொள்ள ப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் துரையப்பா விளையாட்டரங்குக்கு அருகான வீதி அகலிப்பின் போது அரங்கின் எல்லை வேலியையும் மீளமைப்பது தொடர் பிலும் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

இதனிடையே புல்லுக்குளத்தை பார்வையிட்டதுடன் அதன் புனரமைப்பு பணிகள் தொடர்பாகவும் முனீஸ்வரன் வீதிக்கு குறுக்கான வடிகாலின் புனரமைப்பு மற்றும் குளத்தின் அருகான பாதையின் பாதுகாப்பு வேலி தொடர்பிலும் அமைச்சர் கவனம் செலுத்தினார். (அ-9)

# கபிலவஸ்து தாது இந்தியாவுக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு கடந்த 25 நாட்களாக மக்கள் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டிருந்த கபிலவஸ்து புனித தாது நேற்று முன்தினம் விமானம் மூலம் மீண்டும் இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

களனி ரஜமகா விகாரையில் வைக்கப்பட்டிருந்த புனித தாதுவை ஜனாதிபதி எடுத்து வந்து விசேட வாகனத்தில் ஏற்றிவைத்தார். அங்கிருந்து வாகன பேரணியாக எடுத்துச் செல்லப்பட்ட புனித தாது உலங்குவானூர்தி மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

விமான நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட கபிலவஸ்து புனித தாதுவுக்கு விசேட பூஜைகள் மற்றும் பிரித் பூஜைகள் என்பன இடம்பெற்றன.

விசேட பூஜைகளின் பின்னர் அங்கு திரண்டிருந்த மக்களின் ஆனந்தக் கண்ணீருக்கு மத்தியில் கபிலவஸ்து புனித தாது ஸ்ரீலங்கன் எயார் லைன்சின் விசேட விமானத்தில் ஏற்றப்பட்டது. இந்த நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக இடம்பெற்றன.

புனித தாது விமானம் மூலம் பிற்பகல் 3 மணிக்கு இந்தியாவுக்கு எடுத்தச் செல்லப்பட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய கடந்த 19 ஆம் திகதி இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட கபிலவஸ்து புனித தாது கடந்த 25 தினங்களாக நாட்டின் 10 ஸ்தானங்களில் மக்களின் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் அச்சுவேலி நவீன சந்தைக்கட்டடத் தொகுதிக்கு முன்பாக நவீன முறையிலான பேருந்து நிலையத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் வலி.கிழக்கு பிரதேச சபையின் துணைத் தவிசாளர் க.தர்மலிங்கம் அடிக்கல் நாட்டுவதையும் சபை உறுப்பினர்கள் வை.சுப்பிரமணியம், வே.கந்தசாமி, சி.நித்தியானந்தன், அச்சுவேலி பிரதேச சபை உபஅலுவலக பொறுப்பதிகாரி க.றமேஸ் ஆகியோர் அருகில் நிற் பதையும் படத்தில் காணலாம்.

# நல்லிணக்க தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வை முன்னிட்டு இம்முறை வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடத்தவுள்ளதாக அதன் தலைவர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கீழ்ப்பிரிவு, தரம் (6,7,8) மத்தியபிரிவு, தரம் (9,10,11) மேற்பிரிவு தரம் (12,13) என்ற தரப்படுத்தலில் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு ஆகியவை "மது, புகை, போதையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்குவோம்" என்ற தலைப்பிலும் மேற்பிரிவு "சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்போம்" என்ற தலைப்பிலும் நடைபெறவுள்ளது.

**பேச்சுப்போட்டி**

கீழ்ப்பிரிவு 3 நிமிடம், மத்திய பிரிவு 4 நிமிடம், மேற்பிரிவு 5 நிமிடத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

**கவிதைப்போட்டி**

கீழ்ப்பிரிவு 16 வரிகளுக்கு குறையாமலும் மத்தியபிரிவு 20 வரிகளுக்கு குறையாமலும் மேற்பிரிவு 24 வரிகளுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

**கட்டுரைப்போட்டி**

கீழ்ப்பிரிவு - 90 நிமிடம் 1000 சொற்கள், மத்தியபிரிவு -120 நிமிடம் 1250 சொற்கள், மேற்பிரிவு -120 நிமிடம் 1500 சொற்கள் கொண்டவையாக அமைதல் வேண்டும்

பாடசாலை மட்டத்தில் இப்போட்டிகளை நடத்தி முதலாம் இடத்தைப்பெற்ற போட்டியாளர் மட்டும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவங்களை இரட்டைப் பிரதிகளில் தயாரித்து தவறாமல் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பாளர், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் அல்வாய் கிழக்கு , அல்வாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் இப்போட்டிகள் யாவும் யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஏனைய மக்களை போன்று எங்களை வாழ வையுங்கள்

## கமலேஷ் சர்மாவிடம் மக்கள் உருக்கமான வேண்டுகோள்

எங்களை சட்டப்படி குடியேற்றி ஏனைய மக்கள்போல வாழ வைக்குமாறு திருக்கோவிலுக்கு விஜயம் செய்த பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஷ் சர்மா தலைமையிலான குழுவினரிடம் அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் இருந்து யுத்தத்தினால் இடம்பெயர்ந்த தங்கவேலாயுதபுரம் கஞ்சிக்குடியாறு பிரதேசத்தில் வசித்துவரும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஷ் சர்மா தலைமையிலான பிரித்தானிய உயர்ஸ்தானிய கலாநிதி கிரிஸ் நொய்ஸ் தலைமை காரியாலய முகாமையாளரும் செயலாளருமான சிமோன் கிம்சன் தொடர்பாடல் மற்றும் பிராந்திய மக்கள் தொடர்பாடல் செயலாளர் றிச்சட் யுகே ஆகிய நான்கு பேர் கொண்ட குழுவினர் நேற்றைய தினம் காலை திருக்கோவிலுக்கு வந்து இறங்கினர்.

அவர்கள் அருகில் உள்ள இளைஞர் தொழிற்பயிற்சி நிலையத்துக்கு சென்று பார்வையிட்டு இளைஞர்களிடம் குறைகளை கேட்டறிந்து கொண்டு யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய காஞ்சரம்குடா பிரதேசத்தில் மக்களை சந்தித்தபோது இடம்பெயர்ந்த மக்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

கடந்த 2007 இல் இடம்பெயர்ந்து 2009 ஆம் ஆண்டு சமாதான நிலை ஏற்பட்டுள்ள போதும் கடந்த மூன்று வருடங்களாக சட்டப்படி குடியேற்றவில்லை எனவும் தமது வாழ்வாதாரத்திற்காக சுயமாக பல குடும்பங்கள் குடியேறியுள்ளதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மேலும் பல அதிகாரிகள் வந்து பார்ப்பார்கள் எதுவும் செய்து தரவில்லை எனவும் கடந்த கால யுத்தத்தினால் எல்லாவற்றையும் இழந்துள்ளதாகவும் குடிநீர், குடிசைகள், பாடசாலை, மலசலகூடம், மின்சாரம், போக்குவரத்து போன்ற வசதிகள் மற்றும் மாணவர்களின் கல்வி போன்றவைகளை சீர்செய்து வாழ்வதற்கு ஏற்ற வசதிகளை செய்து தருமாறும் மக்கள் தெரிவித்தனர்.

பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஷ் சர்மா தெரிவிக்கையில்,

54 நாடுகள் கொண்ட அமைப்பு அதில் செயலாளர் நாயகமாகவுள்ளேன். நாடுகளுக்கு வேலை செய்து மக்களுக்காக செய்யும் வேலை. எனவே எந்த நாட்டு மக்களுக்காக வேலை செய்கின்றோமே அவர்களை பார்ப்பதற்காக அவர்களது காலடியில் வருவதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இங்கு அதிகமாக பெண்கள் வந்திருக்கின்றதை பார்க்கும் போது அவர்களுக்கு எதிராக குற்றங்கள் இடம்பெறவில்லை என காட்டுகின்றது. இருந்தபோதும் விசேடமாக பெண்கள் பகுதிக்கு கூடுதலான கவனம் செலுத்தி ஒரு இணக்கப்பாடான அபிவிருத்தியை செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்.

எனவே எதிர்பார்ப்பான காலத்தை நோக்கி இருக்கின்றோம். நம்பிக்கையாக காலடியை எடுத்துவைக்க வேண்டும். அதற்காக இணைந்து வேலை செய்வதற்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல அமைப்புக்கள் இயங்கிகொண்டிருக்கின்றன. அந்த வகையில் எதிர்காலத்தை நம்பிக்கையாக பார்க்க வேண்டும் என்றார். (அ-2)

# கடும் காற்றினால் 20 வீடுகள் சேதம்

பொத்துவில் பகுதியில் திடீரென வீசிய வேகமான சூழல் காற்றினால் அங்கு மக்களிடையே ஒருவகை பதற்றம் நிலவியது. இதனால் மக்கள் அச்சத்தில் வீட்டுக்குள் முடங்கி இருந்ததாகவும் நேற்று முன்தினம் மாலை மின்சாரம், தொலைபேசிகள் இயங்கவில்லை என்றும் பொத்துவில் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து காலநிலை அவதான நிலையம் தெரிவிக்கையில், மழைக்காலம் காரணமாக 30-40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசியதாக தெரிவித்தனர்.

இந்த சுழல் காற்றினால் பொத்துவில் சர்வோதயபுரம் பகுதியில் 20 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

சேதமடைந்த வீடுகளை திருத்தி அமைக்கும் பணிகளை அரச சார்பற்ற நிறுவனத்துடன் இணைந்து செயற்படுத்தி வருவதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குகள் எண்ணப்பட்டதும்... வாகனங்கள் பறந்தன இருளில்

# ஆளும்தரப்புடன் இணையுமாறு கோரி த.தே.கூ. பிரதிநிதிகளுக்கு அச்சுறுத்தல்

கிழக்கு மாகாண சபைக்கு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஆதரவை அரசாங்கத்திற்கு பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள ஒருசில நபர்கள் குறித்த உறுப்பினர்களை சந்தித்த போதிலும் அவர்களது முயற்சி பயனளிக்கவில்லை என தெரிய வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவான ஆறுபேரில் மூன்று பேரையும் அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவான இருவரில் ஒருவரையும் தேர்தல் முடிவு வெளியாகி 48 மணிநேரத்திற்குள் சந்தித்துள்ளதாக அறிய முடிகிறது.

இதனை உறுதிப்படுத்திய மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப் பினர் பொன் செல்வராசா, தமது கட்சி மாகாண சபை உறுப்பினர்களை சந்தித்த நபர்கள் வாகனங்களில் வந்து - ஜனாதிபதி செயலகத்திலிருந்து வந்ததாகக் கூறியும், புலனாய்வுத் துறையினர் என்று கூறியுமே நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்த செயல் ஜனநாயக விரோதச் செயல் எனக் குற்றம் சாட்டுகிறார்.

இது தொடர்பாக தகவல் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், "கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் வெற்றி பெற்ற நான்கு பிரதிநிதிகளை புலனாய்வுப் பிரிவு என்றும் ஜனாதிபதி செயலகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறியும் இரண்டுவிதமான குழுக்கள் சந்தித்திருக்கிறார்கள்.

இவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளிடம் நீங்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டால், உங்களுக்குரிய சலுகைகள் வழங்கப்படும்; ஆகவே அரசாங்கத்துடன் சேரவேண்டிய பொறுப்பு உங்களுடையதாக இருக்கின்றது. இதை நிறைவேற்றுவீர்களானால், உங்களுக்கு பல சலுகைகளை வழங்க முடியும் என்றும் அவர்கள் கூறிச்சென்றுள்ளார்கள்.

அதேவேளை, இரண்டாவது தடவையாக இந்திரகுமார் பிரசன்னாவை திங்கட்கிழமை நள்ளிரவுவேளை மீண்டும் ஒருமுறை சந்திக்க முயற்சித்தமை, சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவர்களுடன் சரளமாகப்பேசினாலும் கூட கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மிகவும்பயந்த நிலை யிலேயே அதற்கான பதிலை வழங் கியுள்ளார்கள்.

இவர்கள் வழங்கிய பதிலில், அரசாங்கத்துடன் சேர்வதற்கான எந்தவித வாய்ப்பும் இல்லையென எமது கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்கள்.

எமது மாகாணசபை உறுப்பினர்களை சந்தித்தவர்கள் யார் என்பது உறுதியாகக் கூறமுடியாவிட்டாலும் இத்தகைய செயற்பாடுகளை ஜனநாயக விரோதப்போக்காகவே நாம் கருதுகிறோம்.

இந்த விடயம் தொடர்பாக நான் உடனடியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு அறிவித்துள்ளேன்.

குறித்த நபர்களால், தேடிவந்து சந்திப்புக்குட்பட்டவர்களில் ஒருவரான பிரசன்னா இந்திரகுமார், திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் சாந்த என்று தன்னை அறிமுகப்படுத்திய ஒருவர் தன்னைக் கையடக்கத் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு உரையாடியபின்னர், அந்த நபர் உட்பட இருவர் அலுவலகத்திற்கு வந்து, முன்னறிவித்தலுமின்றி தன்னைச் சந்தித்து ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் ஆதரவு வழங்குமாறு தன்னிடம் கோரிக்கை முன்வைத்ததாக கூறுகிறார்.

இதுதொடர்பாக மேலும் தெரிவித்த பிரசன்னா: "குறித்த நபர் தொலைபேசியில் தொடர்புகொண்டு சிங்கள மொழியில் உரையாற்றினார். நான் வெளியில் நிற்பதாகக் கூறி தற்போது சந்திக்க முடியாது எனத் தெரிவித்தேன். அவர்கள் இரண்டு மணித்தியாலங்களில் வந்து சந்திப்பதாகக் கூறினார்கள். எனது அலுவலகமும் வீடும் ஒரே கட்டடத்தொகுதியில் உள்ளது.



கோ. கருணாகரன்



பிரசன்னா

இரவு 10 மணியளவில் இரண்டு வாகனங்களில் அவர்கள் வந்து அலுவலகப் பாதுகாப்புக் கடமையிலிருந்த பொலிசாரிடம் என்னை எங்கே எனக் கேட்டுள்ளார்கள்.

கடமையில் இருந்த பொலிசாருக்கு இவர்கள் யார் எனத் தெரியாத காரணத்தினால், பொலிசார் எனது கையடக்கத்தொலைபேசிக்கு தொடர்பு கொண்டு விடயத்தை அறியத்தந்தனர்.

இதனை அடுத்து வெளியே எனது ஆதரவாளர்களின் வீடுகளுக்குச் சென்றுகொண்டிருந்த நான் அவசரமாக அலுவலகம் திரும்பியபோது அலுவலகத்திற்கு முன்பாகவும் அண்மித்த பகுதிகளிலும் இரண்டு வாகனங்கள் காணப்பட்டன.

அலுவலகத்தில், இந்த நபர்கள் உரையாடியபோது ஜனாதிபதி செயலகத்திலிருந்து வருவதாகத் தெரிவித்து, ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் மாகாணசபையில் ஆட்சி அமைக்க ஆதரவு வழங்குமாறு கோரினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கையின் அடிப்படையில் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி நான் என்பதை சுட்டிக்காட்டி, அது முடியாது என்றேன்.

இவ்வேளையில் எனது அலுவலகத்திற்கு வந்த சக மாகாணசபை உறுப் பினர் ஜனா எனப்படும் கோவிந்தன் கருணாகரன் என்பவரும் இந்த உரையாடலில் இணைந்து கொண்டார்.

இப்படித் தனிப்பட்ட ரீதியாக எங்கள் உறுப்பினர்களைச் சந்திப்பது பிழை. இது கட்சித் தலைவர்களிடம் பேசவேண்டிய விடயம் என்பதை ஜனாதிபதியிடம் கூறுங்கள்.

நாம் தமிழ் மக்களுடன்தான் நிற்போம். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள். அதன் பிறகு இதுபற்றி யோசிக்கலாம் என கோவிந்தன் கருணாகரன் விளக்கமளித்தார்.

இதனை அடுத்து 10-15 நிமிடங்களில் அவர்கள்திரும்பிவிட்டனர். இவர்கள் ஜனாதிபதி செயலகத்திலிருந்து வந்திருந்தால் அது தொடர்பாக உறுதிப்படுத்தும் ஆவணங்களைக் கேட்டபோது அதற்கு செவிசாய்க்காதவாறு நடந்துகொண்டனர்.

இதன்காரணமாக இவர்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

மீண்டும் நள்ளிரவு 12.00 மணியளவில் ஒரு பஜிரோ ரக வாகனம் எனது அலுவலகம் முன்பாக வந்து நின்றது. மற்றும் ஒரு வாகனம் சற்றுத் தொலைவில் நிறுத்தப்பட்டிருந்தது.

இதனை அவதானித்த ஆதரவாளர்கள் அலுவலகத்திற்குள்ளே இருந்த எனக்கு அறிவிக்க, நான் கோவிந்தன் கருணாகரனிடம் தொடர்பு கொண்டு அவர்கள் மீண்டும் வந்திருப்பது பற்றிக் கூறினேன்.

உடனே அவசரமாக அவர் அலுவலகத்திற்கு வர, குறித்த இரண்டு வாகனங்களும் புறப்பட்டன. புறப்பட்டு சில நிமிடங்களின் பின்னர் செவ்வாய்க்கிழமை எத்தனை மணிக்குச் சந்திக்கலாம் என கேட்டனர். நான் முடியாது என்றேன்.

செவ்வாய்க்கிழமைகூட தொலைபேசியில்தொடர்புகொள்ள பல தடவைகள் முயன்றார்கள். நான் தொடர்புகொள்ளவோ சந்திக்கவோ மறுத்துவிட்டேன் என்றார்.


கோவிந்தம் கருணாகரன் தனது தகவலில், ஜனாதிபதி செயலகத்திலிருந்து தாங்கள் வந்திருக்கிறோம் என தங்களை அறிமுகப்படுத்திக்கொண்ட அவர்கள் கிழக்கு மாகாணசபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் அப்படி ஆதரவளித்தால் 5 கோடி ரூபா பணம், வாகனம், உட்பட பல சலுகைகளை தருவதாக கூறினர். அரசாங்கத்திற்குஆதரவுவழங்காவிட்டால் நீங்கள் பல நெருக் கடிகளை சந்திப்பீர்கள் என அச்சுறுத்தும் பாணியில் அவர்கள் தெரிவித்துள்ளனர். அரசாங்கத்திற்கு ஆதரவளித்தால் நீங்கள் கூறும் பிரதேசத்திற்குரிய அனைத்து நிதியினையும் உங்கள் ஊடாக தருவோம். வசதியாக இருக்கலாம் என்றெல்லாம் கூறியுள்ளனர். வந்தவர்களில் சிலர் இராணுவ புலனாய்வு பிரிவை சேர்ந்தவர்களாவர்.

நாம் சலுகைகளுக்குப் பின்னால் செல்பவர்கள் அல்ல. இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியே நாம் தேர்தலில் மக்களிடம் வாக்கு கேட்டு வெற்றி பெற்றிருக்கிறோம். தனித்தனியாக எங்களிடம் பேசுவதை விடுத்து ஜனாதிபதி, தமிழ்தேசியக் கூட்டமைப்பை அழைத்து பேசி இனப்பிரச்சினைக்குகான தீர்வை முன்வைக்க வேண்டும்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடாகதெரிவு செய்யப்பட்ட எவரும் இந்த சலுகைகளைக் கண்டு மயங்கிவிடக்கூடியவர்கள் அல்ல; இதை உங்களை அனுப்பியவர்களிடம் கூறுங்கள் என தான் தெளிவாக் கூறியதாக அவர் தெரிவித்தார்.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசைன் போல்டின் வேகத்தை மிஞ்சும் ரோபோ சிறுத்தை தயாரிப்பு





உலகின் அதிவேகமான மனிதனான உசைன் போல்டையும் விட மிக வேகமாக ஓடக்கூடிய ரோபோ சிறுத்தையை அமெரிக்க இராணுவ ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

பென்டகனின் நிதியொதுக்கீட்டில் உருவாக்கப்பட்ட இந்த நான்கு கால்களையுடைய ரோபோ இயந்திரமானது மணித்தியாலத்திற்கு 28 மைல்கள் வேகத்தில் ஓடியுள்ளது.

இந்த சீட்டா ரோபோவின் வேகமானது உலகின் அதிவேக மனிதனான உசைன் போல்டையும் விட அதிகமானதாகும்.

உசைன்போல்ட் 2009 ஆம் ஆண்டில் நூறு மீற்றர் தூரத்தை 27.8 விநாடிகளில் ஓடி புதிய உலக சாதனையை நிலைநாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி இயந்திரமானது போஸ்டன் டைனமிக்ஸ் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க பாதுகாப்பு மேம்பாட்டு ஆராய்ச்சி பணித்திட்டங்கள் நிறுவனத்தால் வெவ்வேறு வகையிலான இராணுவ ரோபோக்களின் அபிவிருத்திக்காக வழங்கப்படும் நிதிகளை கொண்டு ரோபோக்களை வடிவமைக்கும் செயற்பாட்டில் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.




மணித்தியாலத்திற்கு 28 மைல் வேகத்தை அடைவது என்பது மிகவும் சவால்மிக்க குறிக்கோளாகும். இதற்காக நான் எனது ரோபோ குழுவினரை பாராட்டுகிறேன் என ரோபோவியல் விஞ்ஞானியான டாக்டர் அல்பிரட் றிசி தெரிவித்துள்ளார்.

இந்த இயந்திரமானது வேகமாக ஓடும் போது அதனது வெளிப்புறப் பகுதிகள் சுதந்திரமாக இயங்க வேண்டுமென்பதே எமது நோக்கமாகும். இதற்காக வைல்ட் கெட் என்ற பெயரில் திறந்த வெளியில் ஓடக்கூடிய இயந்திரத்தை உருவாக்கி வருகிறோம். இது அடுத்த வருடத்தின் முன்பகுதியில் பரிசோதிக்கப்படும் என அவர் கூறினார்.

எதிர்காலத்தில் இந்த இயந்திரமானது அவசர நிலைமைகளிலான பதிலளிப்பு, மனிதாபிமான உதவிகள் மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பங்களிப்பு செய்யும் என அமெரிக்க படையினர் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இதேவேளை மனிதனைவிட வேகமாக ஓடக்கூடிய இவ் இயந்திரத்தின் மூலம் யுத்த களங்களில் அதிவேக கொலையாளியாக உருவாகலாம் என ஷெபீல்ட் பல்கலைக்கழகத்தின் செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோ இயந்திரத்துறை பேராசிரியரான நோயல் ஷார்க்கி தெரிவித்துள்ளார்.


# கூகுளை பின்னுக்கு தள்ளிய பேஸ்புக்




சர்வதேச அளவில் வலைத்தளங்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிடும் அலெக்ஸா நிறுவனத்தின் பட்டியலில் கூகுகளை பின்னுக்கு தள்ளி முதலிடத்தை பிடித்திருக்கிறது பேஸ்புக்.

கணனி யுகத்தின் ஜாம்பவானான கூகுள் நிறுவனம்தான் தரவரிசை பட்டியலில் முதலில் இருந்து வந்தது.தற்போது முதன்முறையாக கூகுளை பின்னுக்கு தள்ளிவிட்டு முதலிடத்தை பிடித்துள்ளது பேஸ்புக்.

இது திகைக்க வைக்கும் சாதனை என்றுதான் சொல்ல வேண்டும். எந்த ஒரு தகவலைத்தேட வேண்டும் என்றாலும் கூகுளை திறக்காமல் சாத்தியம் இல்லை என்று ஒரு நிலை இருப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.ஆனால், சில காலங்களாக அனைவரின் மனதையும் இரவு பகலாக ஆக்கிரமித்து வரும் பேஸ்புக் தற்போது முதலிடத்தை பிடித்துள்ளது




இலட்சக்கணக்கான மக்களால் தினம் தினம் ஆயிரக்கணக்கான வலைத்தளங்கள் இணையத்தில் தேடப்பட்டு வருகிறது. இவற்றில் எந்த வலைத்தளம் அதிகமான பேரால் தேடப்படுகிறது என்பது பற்றிய தரவரிசை பட்டியலை பிரித்து காட்டும் நிறுவனம் அலெக்ஸா.

இந்த அலெக்ஸா டூல்பாரை ஒருமுறை உங்களது சிஸ்டத்தில் பயன்படுத்திவிட்டால் போதும் அதன்பின்னர் எந்த வலைத்தளத்தை திறந்தாலும் அதன் தரவரிசை பட்டியல் தெளிவாக காட்டப்படும்.இதில் முதல் 10 இடத்தில் இருக்கும் வலைத்தளங்களின் பட்டியலையும் பார்க்கலாம். முதலிடத்தில் பேஸ்புக், இரண்டாவது இடத்தில் கூகுள், மூன்றாவது இடத்தில் யூடியூப், நான்காவது யாஹூ மற்றும் ஐந்தாவது இடத்தில் பெய்டு காம்.

இதை தொடர்ந்து ஆறாவது இடத்தில் விக்கிபீடியா, ஏழாமிடத்தில் விண்டோஸ் லைவ் இருக்கிறது. சமூக வலைத்தளமான டுவிட்டர் எட்டாமிடத்தில் உள்ளது. கியூகியூ காம் ஒன்பதாம் இடத்திலும் மற்றும் அமேசான் காம் பத்தாமிடத்திலும் உள்ளன.


# அப்பிள் 5 எஸ் வெளியீடு




தொழில்நுட்ப உலகில் அனைவராலும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அப்பிள் 5 எஸ். நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. மறைந்த அப்பிள் நிறுவனத்தின் ஸ்தாபகர் ஸ்டீவ் ஜொப்ஸை தொடர்ந்து தலைமை நிர்வாக அதிகாரியாக தவியேற்றுக் கொண்ட டிம்குக் அப்பிள் 4 எஸ். ஸ்மார்ட் போனை கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் வெளியிட்டு வெற்றியும் கண்டார்.

இதனைத் தொடர்ந்து தற்போது பெரும் எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியுள்ள அப்பிள் தொழில்நுட்பத்தில் உருவான மற்றுமொரு படைப்பான அப்பிள் ஐ போன் 5 எஸ். இனை உத்தியோகபூர்வமாக அப்பிள் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதன் விலை ? சந்தையில் எப்போது கிடைக்கும்? இதில் புகுத்தப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பங்கள் என்ன? என்ற அனைத்துக்கேள்விகளுக்கும் விடைகிடைக்கும் நேரம் தற்போது நெருங்கிவிட்டது.

# மடிக்கணனியை வடிவமைத்தவர் மரணம்




கையில் எங்கும் எடுத்து செல்ல வசதியாக திறந்து மூடும் வசதி கொண்ட கணனியான மடிக்கணனியை வடிவமைத்த தொழில்நுட்ப நிபுணர் பில் மோக்ரிட்ஜ் கடந்த வியாழக்கிழமை காலமானார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த மோக்ரிட்ஜ் (வயது 69) காலமான தகவலை மோக்ரிட்ஜ் இயக்குநராக பணியாற்றி வந்த நஷனல் டிசைன் மியூசியம் அறிவித்துள்ளது.






# வயர்லெஸ் சார்ஜூடன் Nokia Lumia 920



சிறந்த கைபேசிகளை உற்பத்தி செய்து முன்னணி நிறுவனமாகத் திகழும் நொக்கியா நிறுவனமானது தற்போது வயர்லெஸ் சார்ஜ் முறையுடன் கூடிய நவீன Nokia Lumia 920 கைப்பேசிகளை அறிமுகப்படுத்தவுள்ளது.

இக்கைபேசியானது 1.5 GHz வேகத்தில் செயற்படும் புரோசசரை உள்ளடக்கியுள்ளதுடன் 8 மெகாபிக்சல் கமெரா, 32GB உள்ளக மெமரி 1GB பிரதான நினைவகம் என்பனவற்றை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் 4.5 அங்குலமுடைய உயர் துல்லியம் கொண்ட தொடு திரையினையும் கொண்ட இக்கைபேசியானது மக்கள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெறும் என எதிர்பார்ப்பதாக நொக்கியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

# Firefox 16 ஆவது பதிப்பு



இணைய உலகில் ஏனைய உலாவிகளுக்கு போட்டிபோடும் வகையில் காணப்படும் பயர்பொக்சானது தனது 15 ஆவது பதிப்பினை சில வாரங்களுக்கு முன்னரே அறிமுகப்படுத்தியது.

இந்நிலையில் தற்போது அதிரடியாக அதன் 16 ஆவது பதிப்பின் பீட்டா பதிப்பை வெளியிட முடிவு செய்துள்ளது. இணையத்தள வடிவமைப்பாளர்களுக்கு ஏற்ற வகையில் Command Line இல் அமைந்த Developer களை கொண்ட பதிப்பாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Firefox 16 ஆனது விண்டோஸ் லினக்ஸ், மெக் போன்ற இயங்குதளங்களில் செயற்படக்கூடிய வகையில் தனித்தனியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வலுவான பல அம்சங்களை கொண்ட இப்பதிப்பின் மூலம் பயனர்கள் இலகுவாக இணைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையதள முகவரி (http://www.mozilla.org/en-US/firefox/beta/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

219

## ஆன்றோர் தரிசனம்

ஒருமுறை நாரத முனிவர் கண்ணபிரானைச் சந்தித்தார். அப்போது நாரதர் பிரபு, சத்சங்கத்தால் ஒருவன் பெறக்கூடிய பயன் எத்தகையது என்பதை விளக்கியருள வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

இதற்குக் கண்ணபரமாத்மா உடனே பதில் கூறவில்லை. நாரதரே இதற்கான பதிலை அனுபவ பூர்வமாகத் தெரிந்துகொள்வது நலம் என்று கருதினார்.


எனவே பகவான் கண்ணபிரான் நாரதரைப்பார்த்து முனிவரே கிழக்கு திசையை நோக்கிச் செல்லுங்கள். அங்கே ஒரு பெரிய குப்பைமேடு உள்ளது. அதில் ஒரு சாணிப்புழு இருக்கும். அதனிடம் உங்கள் கேள்வியைக்கேளுங்கள் என்று கூறினார்.

நாரதர் பகவான் கிருஷ்ணனின் கட்டளைப்படி உண்மையை அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவலோடு குப்பைமேட்டை அடைந்தார். பகவான் குறிப்பிட்டபடி ஒரு சாணிப்புழு அங்கு இருந்தது.

அவரது கேள்வியை எதிர்பார்த்திருந்தது போல நாரதர் கேள்வி கேட்டு முடித்ததும் அப்படி இப்படி நெளிந்த புழு மறுவினாடியே இறந்து போய்விட்டது.

இதனைக் கண்ட முனிவர் மிகவும் மனம் வருந்தினார். கவலையுடன் நேராக கண்ணபிரானிடம் சென்றார். நடந்ததைத் தெரிவித்தார். கண்ணபிரான் நாரதர் கூறியதைக்கேட்டுவிட்டு நாரதமுனிவரே! நீங்கள் இப்போது நேரே வடக்கு நோக்கிச் செல்லவேண்டும். அங்கே ஒரு பாழடைந்தகோயில் இருக்கும். அதன் கோபுரத்தில் ஒரு புறா இருக்கும். அதனிடம் உங்கள் கேள்வியைக் கேளுங்கள் என்றார்.

பகவான் சொன்னபடியே நாரதர் வடக்கே சென்றார்.



பாழடைந்த கோவிலையும் கோபுரத்தில் ஒரு புறாவையும் கண்டார். புறாவிடம் புறாவே, சத்சங்கங்களால் எப்படிப்பட்ட பயன் விளையும்? என்று வினவினார்.


பதிலை அதனிடம் எதிர்பார்த்தார். பதில் இல்லை. படபடவென்று இறக்கையை அடித்துக்கொண்டு புறா நாரதர் காலில் விழுந்து உயிரை விட்டது.

நாரதர் மிகவும் அதிர்ச்சியடைந்தார். ஐயோ! நான் கேள்விகேட்டதும் சாணிப்புழு மாண்டது. அதைப்போலவே புறாவும் இறந்துவிட்டதே. இதென்ன கொடுமை. இரண்டு உயிர்களின் மரணத்திற்கு நான் காரணமாகிவிட்டேனே! என்று எண்ணி எண்ணி அளவற்ற வேதனை அடைந்தார்.

துக்கம் நாரதரை மிகவும் வாட்ட, மீண்டும் கண்ணபிரானைச் சந்தித்தார். நாரதரை எதிர்பார்த்திருந்த கண்ணன், மாமுனிவரே விடை கிடைத்ததா? என்று கேட்டார். நாரதரால் பேசக்கூட முடியவில்லை. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு சோகக்குரலில் நடந்தவற்றைக்கூறினார்.

அப்படியா! நீங்கள் தெற்கு திசையில் செல்லுங்கள். அங்கே ஒரு மன்னன் இருக்கிறான். அவனுக்கு இன்று ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளது. அந்தக் குழந்தையிடம் உங்கள் சந்தேகத்தைக்கேட்கலாம். நிச்சயம் பதில் கிடைக்கும் என்றார் கண்ணபிரான்.

இதனைக்கேட்டதும் நாரதர் மேலும்



பதறிப்போனார்.

முதலில் சந்தித்த புழுவும் அடுத்து கண்ட புறாவும் இறந்து போனதை எண்ணிய அவர் பகவான் கூறியபடி இப்போது செல்லவில்லை. இதுவரை நடந்ததுபோல் அரசகுமாரனும் மரணமடைந்துவிட்டால் தான் தப்பிக்க இயலாது என்று எண்ணினார். ஆனால் தனது மனநிலையை கண்ணபிரானிடம் தெரிவித்தார்.

நாரதரின் கவலையை உணர்ந்த கண்ணபிரான் அவருக்குப் பல ஆறுதல் மொழிகள் கூறினார். அஞ்சவேண்டாம் நாரதரே! அசம்பாவிதம் எதுவுமே நடக்காது. இந்தமுறை உங்கள் கேள்விக்கு நிச்சயம் பதில் கிடைக்கும். சென்று வாருங்கள் என்றார்.

சற்று ஆறுதலடைந்த நாரதர் கண்ணபிரான் கூறியபடி அரசனின் அரண்மனையை அடைந்தார். தொட்டிலில் குழந்தை இருந்தது.

நாரதர் தயக்கத்துடன், குழந்தாய் சத்சங்கத்தால் எப்படிப்பட்ட பயன் ஏற்படுகிறது? என்று கேட்டார்.

அப்போது நாரதர் எதிர்பாரா நிகழ்ச்சி நடந்தது. பட்டுத் தொட்டிலிலிருந்து அக் குழந்தை இறங்கி வந்தது.

சில விநாடிகளில் தேவனாக மாறி நாரத முனிவரைப் பணிந்து வணங்கியது.

முனிவர் ஆச்சரியத்தால் வாயடைத்துப்போனார். தேவனாக மாறிய குழந்தை முனிவர் பெருமானே! அடியேன் வேறு யாருமில்லை. குப்பைமேட்டில் சாணிப்புழுவாக இருந்தவன்தான் தாங்கள் அங்கு வந்த மகிமை காரணமாக புறாவாகும் பாக்கியம் கிடைத்தது.

புறாவான பின் தங்கள் தரிசனம் பெற்றமையால் இந்த அரண்மனையில் இளவரசனாகப் பிறந்தேன்.

இந்தப்பிறவியிலும் தங்களைக் கண்டதால் இப்போது தேவனாகும் பாக்கியம் பெற்றேன். இந்த என் வரலாறும் வளர்ச்சியும் சத்சங்கம் விளைவித்த அற்புதமே ஆகும் என்று கூறிவிட்டு தேவலோகத்தை நோக்கிப் பறந்து சென்றான்.

***நல்லவர்களோடு உறவாடுங்கள், நல்லவர்களாக நீங்களும் ஆகமுடியும்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய நாடுகளின் எம்.பிக்கள் யாழ். வருகை

## மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்வு

மிதிவெடி அகற்றல் செயற்பாடுகள் தொடர்பிலும் மீள்குடியேற்றம் தொடர்பிலும் பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் அதிக அக்கறையுடன் கேட்டறிந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகைதந்த பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 61 பேர் கொண்ட குழுவினர் பல்வேறு இடங்களுக்கும் விஜயம் செய்தனர்.

யாழ்ப்பாணம் பலாலிக்கு விமானம்மூலம் வந்திறங்கிய இந்தக்குழுவினர்கள் யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியை முற்பகல் 10.30 மணியளவில் வந்தடைந்தனர்.

அங்கு வடக்கு மாகாணத்தில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனால் விளக்கமளிக்கப்பட்டதோடு யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் விளக்கமளித்தார்.

இதன்பின்பு பொது நலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் சில கேள்விகள் எழுப்பப்பட்டது. அதாவது யுத்தத்திற்குப்பின்னரான காலப்பகுதியில் வடக்கில் எவ்வளவு பிரதேசங்களில் மீள்குடியேற்றம் இடம்பெற்றுள்ளது எனவும் இன்னும் எத்தனை பேர் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளனர் எனவும் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் எத்தனை வீதம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது எனவும் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு யாழ். அரச அதிபர் மற்றும் ஆளுநரின் செயலாளரினாலும் யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகர் வ. முருகதாஸினாலும் விளக்கமளிக்கப்பட்டது. இதில் மீள் குடியேற்றும் தொடர்பில் பதிலளிக்கும் போது நீண்டகால யுத்த அழிவுகளை எதிர்கொண்ட பிரதேசமாகவுள்ளதால் மீள்குடியேற்றம் இன்னும் பூர்த்தியாக்கப்படவில்லை. இருந்தும் கணிசமானவர்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

அத்தோடு மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகளும் இன்னும் பூர்த்தியாக்கப்படவில்லை. அதுவும் மீள்குடியேற்றத்திற்கு தடையாகவுள்ளது எனக் கூறப்பட்டது.

இதுதவிர மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் 89 வீதம் யாழ். மாவட்டத்தில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது எனவும் கிளிநொச்சி , முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது என யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகர் தெரிவித்தார். இதன்பின்பு பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் பெண்கள், சிறுவர்கள் விவகாரங்கள், அபிவிருத்தி நடவடிக்கைகள் , கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள் , வீட்டுத்திட்ட உதவிகள் தொடர்பிலும் கேள்விகள் எழும்பியிருந்தனர். (அ-6)

## தங்க பிஸ்கட்டுக்களுடன் ஒருவர் கைதானார்

தங்கபிஸ்கட்டுக்களைக் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இடம் பெற்றுள்ளது.

பெங்களூருக்கு செல்லவிருந்த 47 வயதான வர்த்தகரொருவர் 10 மில்லியன் ரூபா பெறுமதியான 12 தங்க பிஸ்கட்டுக்களை தனது உடம்பில் மறைத்து வைத்திருந்த போது விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் வர்த்தக நடவடிக்கைகளுக்காக இந்தியாவுக்கு அடிக்கடி சென்று வருவதாகவும் இந்நிலையில் இவர் 5 தடவைகள் தங்க பிஸ்கட்டுக்களை கடத்தியதாகவும் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. (அ-2)

## 3 ஆயிரத்து 500 பேருந்துகளை இறக்குமதி செய்ய திட்டம்

(கொழும்பு)

அரச போக்குவரத்து சேவையை வலுப்படுத்தும் வகையில் 3ஆயிரம் பேருந்துகளை சீனாவில் இருந்து இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமரா வெல்கம தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சுமார் 3 ஆயிரத்து 500 பேருந்துகள் 15 வருடங்கள் பழையது என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இலங்கை போக்குவரத்து சபையை வலுப்படுத்த புதிய பேருந்துகள் தேவை என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-9)

## யாழ்.போதனா வைத்தியசாலை நடைபாதைக்கு முன்பாக பாரிய கிடங்கு



யாழ். போதனா வைத்தியசாலையின் முன்பக்கமுள்ள நடைபாதையில் பாரிய கிடங்கொன்று நீண்ட நாட்களாக காணப்படுவதாகவும் இதனால் அதனூடாக செல்வோர் ஆபத்தினை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பாதையினூடாக நோயாளிகள் வயோதிபர்கள் செல்லும் போது குறித்த கிடங்கினைக் கடந்து செல்வது பெரும்பாடாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த கிடங்கினூடாக கழிவு நீர் வாய்க்காலொன்றும் செல்வதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. குறித்த கிடங்கு தோற்றம் பெற்று ஒரு மாத காலத்திற்கும் மேலாகிவிட்ட போதிலும் இதுவரை அது திருத்தியமைக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-4)

## வீதிகளில் நின்று மது அருந்துவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

மதுபான கடைகளில் மதுவை வாங்கிய பின்னர் அவ்விடங்களிலேயே மது அருந்துபவர்கள் மீது கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன்சிகேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இது தொடர்பில் தெரிவிக்கையில், யாழில் தற்போது வன்முறை சம்பவங்கள் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட போதிலும் சில சம்பவங்கள் எல்லை மீறிச் செல்கின்றன.

இதற்கு மதுபோதையில்வீதியில்நடமாடுவதே காரணமாகும். இச்செயற்பாடு யாழ் நகரில் மட்டுமல்லாது யாழ்.மாவட்டம் முழுவதிலும் ஒவ்வொரு வாரமும் இடம்பெறுகிறது. இதனால் 40 பேர்களுக்கு குறையாமல் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சில இடங்களில் மதுவினை வாங்கி கூட்டாக வீதிகளிலேயே அருந்திவிட்டு ரகளைகளிலும் ஈடுபடுகின்றனர். இவ்வாறு ரகளைகளில் ஈடுபடுவதில் இளைஞர்களே அதிகளவில் காணப்படுகின்றனர்.

இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது பொலிஸார் இனி வரும் காலங்களில் கடுமையான சட்டநடவடிக்கை எடுப்பர். மேலும் ஞாயிறு, விடுமுறை தினங்களில் இவ்வாறான இடங்களில் பொலிஸாரின் ரோந்து அதிகரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-4)

## அரசு தேர்தலில் வெற்றிபெற்றதனால் நாட்டின் பிரச்சினைகள் முடிவுக்கு வராது

### ஹர்ச டி சில்வா எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளமையினால் நாட்டின் பிரச்சினைகள் அனைத்தும் முடிவுக்கு வந்துள்ளது என்று கூற முடியாது. தேசிய பொருளாதாரத்தில் அநீதிகள் ஏற்படுத்தி பொருளாதார நல்லாட்சியில்லாத சூழல் இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பொருளாதார நிபுணருமான ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே ஹர்ச டி சில்வா எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

எதிர்க்கட்சிகளை விமர்சிக்கும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் பிரதமராக வரமுடியாமலுள்ளார். ராஜபக்ஷ குடும்பத்தைத் தவிர வேறொருவர் அரசின் முதன்மை பதவிகளை வகிக்க முடியாது என்பதே உண்மையாகும்.

எனவே இன்று மத்திய கிழக்கில் பெரும் துன்பங்களை அனுபவித்து இலங்கை பெண்கள் அனுப்பும் நிதியிலேயே அரசாங்கம் உயிர் வாழ்கின்றது.

நாட்டின் பொருளாதார நல்லாட்சியை அரசாங்கம் சண்டியர்களைப்போல் கொண்டு நடத்துகின்றது. இதனால் பங்குச்சந்தை மோசடி, தேசிய சேமிப்பு வங்கியின் மோசடி என பல்வேறு பாரிய ஊழல் மோசடிகள் வெளியே வந்துள்ளது. உண்மைகளை சுட்டிக்காட்டும் போது தேசத் துரோகிகளாகவே அரசாங்கம் எம்மை வர்ணிக்கின்றது. 393 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படும் நிறுவனத்தின் பங்குகளை சட்டவிரோதமான முறையில் மக்கள் நிதியை பயன்படுத்தி தேசிய சேமிப்பு வங்கி கொள்வனவு செய்தமையால் பெரும் நஷ்டம் ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

ஆனால் இதனை மூடி மறைத்து உண்மையான குற்றவாளிகளை அரசு பாதுகாத்து வருகின்றது. 2011 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 720 மில்லியனை வருமானமாகப் பெற்றுக் கொண்ட தேசிய சேமிப்பு வங்கி இன்று அதாவது கடந்த ஆறு மாதத்திற்குள் 897 மில்லியன் ரூபாவை மாத்திரமே பெற்றுக் கொண்டுள்ளது. இது 76 வீதமான வீழ்ச்சியாகும். இவ்வாறு தேசிய சொத்துக்கள் மற்றும் நிறுவனங்கள் வீழ்ச்சியினையே கண்டு வருகின்றது என்றார். (அ-2)

## 120 பாடசாலைகளுக்கு பல்லூடகக் கருவிகள்

(சிவநகர்)

ஜனாதிபதி பேரணியின் வாழ்க்கைத்திறனில் ஒன்றான ஆங்கில கற்கைநெறித் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தின் 12 கல்வி வலயத்தில் தலா 10 பாடசாலைகள் வீதம் 120 பாடசாலைகளுக்கு கணனி மற்றும் பல்லூடக கருவிகள் என்பன வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பொருட்கள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கி வைக்கப்படவுள்ளது.

இப் பொருட்கள் பெறுவதற்கு கிளிநொச்சி வலயத்தில் கிளி/தர்மபுரம் இலக்கம்.01, அ.த.க.பா., கிளி/இரணைதீவு றோ.க,கிளி/இயக்கச்சி அ.த.க., கிளி/மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலை, கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம், கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை, கிளி/வண்ணேரிக்குளம் மகா வித்தியாலயம், கிளி/கண்டாவளை மகா வித்தியாலயம், கிளி/சிவநகர் அ.த.க., கிளி/புனித பற்றிமா றோ.க. பாடசாலை ஆகிய பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (அ-3-254)

## ஆங்கில தின போட்டி

(சிவநகர்)

வடமாகாண ஆங்கிலதின எழுத்தாக்கல் போட்டி நாளை சனிக்கிழமை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணி தொடக்கம் கிளி/புனித திரேசா மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் மாவட்ட மட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட அனைத்து வடமாகாண மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கிளி/மாவட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் க.மயில்வாகனம் அறிவித்துள்ளார். (அ-9-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் குழந்தைகள் இறப்பது இந்தியாவில்தான் அதிகம்

## ஐ.நா.அதிர்ச்சித்தகவல்

உலகில் ஒவ்வொருநாளும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இந்தியாவில்தான் அதிகளவில் இறப்பதாக ஐ.நா.அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டில் மட்டும் போதிய அடிப்படை வசதியும் சத்துணவும் இல்லாமல் உடல்நிலை பாதிக்கப்பட்டு சுமார் 15.55 இலட்சம் குழந்தைகள் இந்தியாவில் மட்டும் உயிரிழந்துள்ளனர் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

குழந்தைகள் இறப்பு விகித அறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. அதில் 5 நாடுகளில் மட்டும்தான் குழந்தைகள் இறப்பு விகிதம் அதிகமாகவுள்ளது.

அவை இந்தியா, நைஜீரியா, கொங்கோ, பாகிஸ்தான், சீனா ஆகியனவாகும்.

ஏனைய 4 நாடுகளை விடவும் இந்தியாவில் குழந்தைகள் இறப்பு விகிதம் மிக அதிகமாக இருப்பதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

தனியொரு மனிதனுக்கு உணவில்லையேல் ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாடல் பாடிய பாரதி வாழ்ந்த இந்தியாவில் போதிய சத்துணவும் அடிப்படை வசதிகளும் இல்லாமல் பல இலட்சம் குழந்தைகள் இறந்து கொண்டிருக்கின்றன என்ற தகவல் ஒவ்வொரு இந்தியரையும் தலைகுனிய வைக்கிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# கூடங்குள அணு உலையை மூடுங்கள்; 30 ஆயிரம் மீனவர்கள் உண்ணாவிரதம்

கூடங்குளம்மீனவர்கள் மீதுபொலிஸார் தடியடி நடத்தியதைக் கண்டித்தும் அணு உலையை மூட வலியுறுத்தியும் மீனவர்கள் தொடர்ந்து உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 10 ஆம் திகதி முதல் கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மொத்தம் 48 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 30 ஆயிரம் மக்கள் உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.

தற்போது மீனவர்களின் வேலை நிறுத்தம் மற்றும் உண்ணாவிரத போராட்டத்தால் இன்று ஒருநாள் மட்டும் சுமார் ஒன்றரை கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. அணு உலையை மூடும் வரை கடலுக்குச் செல்லமாட்டோம் என்று மீனவர்கள் அறிவித்துள்ளனர். (அ-2)

# ஜப்பான் நோக்கி போர் கப்பலை அனுப்பியது சீனா


கிழக்கு சீன கடல்பகுதியில் உள்ள சர்ச்சைக்குரிய தீவை ஜப்பான் விலைக்கு வாங்கி உள்ளதால் மோதல் ஏற்படும் அபாயம் உருவாகி உள்ளது.

தாய்ஓயு என்ற தீவுப்பகுதிக்கு ஜப்பான், சீனா போன்ற இரு நாடுகளும் சொந்தம் கொண்டாடி வருகின்றன. இது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே மோதல் நிலை இருந்து வருகிறது.

இத் தீவுகள் ஜப்பானை சேர் ந்த தனியாருக்கு சொந்தமாக இருந்தன. அவற்றை ஜப்பரன் விலை கொடுத்து வாங்குவதாக அறிவித்தது. இதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன் சீன பிரதமர் வென் ஜியாவோ ஜ்ப்பானுக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார்.

அவர் கூறுகையில், எங்கள் இறையாண்மையை காக்க ஒரு அங்குல நிலத்தை கூட விட்டுக் கொடுக்க மாட்டோம். இந்நிலையில் நேற்று முன்தினம் தீவுகளை வாங்கும் பணிகள் முடிந்து விட்டன என்று ஜப்பான் அறிவித்தது. மேலும் 2 போர்க் கப்பல்களை உனடியாக அங்கு அனுப்பி வைத்துள்ளது. (அ-2)

# அமெ.போர்க்கப்பல்கள் லிபியாவுக்கு விரைவு



லிபியா நாட்டில் அமெரிக்க தூதரகம் தாக்கப்பட்ட கொதிப்பில் அமெரிக்கா இரண்டு போர்க்கப்பல்களை லிபியாவிற்கு அனுப்பியுள்ளது.

இஸ்லாமிய மதத்திற்கு எதிராக அமெரிக்கர்கள் தயாரித்த திரைப்படம் எகிப்து, லிபியா நாடுகளில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. எகிப்து, லிபியாவின் பெங்காசி நகரில் உள்ள அமெரிக்க தூதரகங்கள் மீது நேற்றைய தினம் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தினர்.

இதில் அமெரிக்காவிற்கான லிபிய தூதர் கிறிஸ்டோபர் ஸ்டீவன்ஸ் உள்ளிட்ட 3 பேர் பலியாகினர்.

இந்நிலையில் அமெரிக்கா தனது இரு போர்க்கப்பல்களை லிபியா கடற்பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளது.

இது குறித்து பென்டகன் செய்தி தொடர்பாளர் கூறுகையில், அமெரிக்கத் தூதர் கிறிஸ்டோபர் ஸ்டீவன் கொல்லப்பட்டதை தொடர்ந்து லிபியாவிற்கு கலவரத்தடுப்பு கப்பற்படையினர் 50 வீரர்களுடன் இரு கப்பல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் தூதர் கொல்லப்படுவதற்கு முன் எப்படி கிளர்ச்சியாளர்கள் பாதுகாப்பு வளையத்தினை மீறி தாக்குதல் நடத்தினர் என்பது குறித்து ஆய்வு செய்யவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# வீரப்பனின் திரைப்படத்தை வெளியிட மனைவி மறுப்பு

சந்தனக்கடத்தல் வீரப்பனின் வாழ்க்கை பற்றிய வனயுத்தம் என்ற படம் தமிழில் வெளி வருகின்றது.

இப்படத்திற்கு வீரப்பனின் மனைவி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இப்படத்தில் தன்னுடைய கதாபாத்திரம் அவலமாக சித்திரிக்கப்பட்டுள்ளதாக அவர் கருதுகின்றார்.

இது தொடர்பாக முத்து லட்சுமி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். இப்படம் வெளிவந்தால் தன்னுடைய பிள்ளைகளின் வாழ்க்கை சீர்குலைந்து விடுமெனவும் தெரிவித்துள்ளார்.

இப்படத்தில் அர்ஜுன் பொலிஸாகவும் கிஷோர் வீரப்பனாகவும் நடிக்கின்றனர். (அ-2)

# தலிபான்களின் கடந்த ஆண்டு வருமானம் 2 200 கோடி ரூபா

## ஐ.நா.தகவல்

தலிபான் தீவிரவாதிகள் கடந்தாண்டு மட்டும் 2 ஆயிரத்து 200 கோடி ரூபா வருமானம் ஈட்டியுள்ளதாக ஐ.நா தகவல் வெளியிட்டுள்ளது.

பல்வேறு நாடுகளில் இருந்து வழங்கப்படும் நன்கொடை ஆப்கானிஸ்தானில் பயிரிடப்படும் ஒபியம் போதைப்பொருள், பொதுச் சொத்துக்களை கொள்ளையடித்தல் உள்ளிட்டவை மூலம் இந்த தொகையை தலிபான்கள் ஈட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பயிரிடுபவர்கள் கடத்தல் தொழிலில் ஈடுபடுபவர்களிடம் இருந்தே அதிக அளவு பணம் கிடைக்கிறது. மேலும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் உள்ள பகுதி மக்களிடம் இருந்தும் தலிபான்கள் பணம் வசூலிக்கின்றனர்.

இவை தவிர ஆப்கானிஸ்தானில் செயற்படும் கட்டுமான நிறுவனங்கள், செல்போன் நிறுவனங்கள், போக்குவரத்து நிறுவனங்கள், சுரங்க நிறுவனங்கள் பெரும் தொழில்களை நடத்துபவர்களை மிரட்டியும் தலிபான்கள் பணம் பறிக்கின்றனர். இவை தவிர பல்வேறு நாடுகளில் இருந்து தலிபான்களுக்கு நன்கொடையாகவும் பணம் கிடைக்கிறது.

இத்தொகையை கொண்டே வெடிகுண்டுகளையும் ஆயுதங்களையும் பயங்கரவாதிகளால் வாங்க முடிகிறது. ஆப்கானிஸ்தானில் பெரிய அளவில் பொருளாதார சிக்கல் உள்ள போதிலும் பயங்கரவாதிகளின் கைகளில் தாராளமாக பணம் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# முகாம்களில் தங்கியிருந்த 500 பேரைக் காணவில்லை

அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட கலவரத்தையடுத்து பாதுகாப்பாக நிவாரண முகாம்களில் தங்கியிருந்த சுமார் 500 பேர் மாயமாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அசாம் மாநிலத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு போடோ பழங்குடியினத்தவர்களுக்கும் வங்கதேச சிறுபான்மை முஸ்லிம்களுக்கும் இடையே கலவரம் வெடித்தது.

கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களை தங்க வைக்க நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் சுமார் 215 முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தது. 2 இலட்சம் பேர் முகாமில் தங்கியிருந்தனர்.

இந்நிலையில் முகாமில் தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை குறித்து கணக்கெடுக்கப்பட்டபோது ஆயிரக்கணக்கானோர் திடீரென காணாமல் போயுள்ளனர்.

தற்போது வரை எடுத்துள்ள கணக்கெடுப்பின் படி 500 வரை காணாமற்போயுள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் மாயமானவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# மனித மலத்தில் தயாராகும் போலி சிகரெட்டுக்கள்

## சீனாவின் கைவண்ணம்

முன்னணி நிறுவனங்கள் தயாரிக்கும் எலக்ரோனிக் பொருட்கள் உட்பட சகலத்தையும் பிரதி எடுத்தது போல போலி தயாரிப்புக்களை உற்பத்தி செய்வது சீனாவுக்கு கைவந்த கலையாகும்.

இந்நிலையில் பிரிட்டன் மக்கள் விரும்பி புகைக்கும் சிகரெட்டுக்களில் மனித மலம், இறந்த பூச்சிகள், புழுதி மண் போன்றவை கலக்கப்பட்டிருக்கும் தகவல் சோதனையில் தெரியவந்துள்ளது.

இதுபோல தரக்குறைவான ஆரோக்கியத்துக்கு கேடுவிளைவிக்கும் போலி சிகரெட்டுக்கள் சீனாவில் தயாராகி முறைகேடான வகையில் பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டதும் அம்பலமானது.

பிரிட்டனில் போலி சிகரெட் தொடர்பாக அறிய பர்மிங்காம் நகரில் சுவிட்சர்லாந்தைச்சேர்ந்த எம்.எஸ். இன்டலிஜென்ஸ் நிறுவனம் சமீபத்தில் ஆய்வொன்றை மேற்கொண்டது. இதில் 30.9 சதவீத சிகரெட்டுக்கள் போலி மற்றும் வெளிநாடுகளிலிருந்து முறைகேடாக எடுத்துவரப்படுகின்றன என்று தெரிய வந்தது.

கடந்தாண்டில் இது 14.1 சதவீதம் மட்டுமேயிருந்தது. ஒரே ஆண்டில் இரட்டிப்பாக உயர்ந்தது. அதிகாரிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதுபோன்ற போலி சிகரெட்டுக்கள் உடல் ஆரோக்கியத்தை பாதிக்கும். உடல் நலத்தைக்கெடுக்கும். உயிருக்கு ஆபத்தாக முடியும். எனவே எச்சரிக்கையாக இருங்கள் என்று சுகாதார துறை அந்நாட்டு மக்களை எச்சரித்துள்ளது. (அ-2)

# டி.ராஜேந்தரும் ஆர்ப்பாட்டத்தில்

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள புத்தமத கல்வி மைய அடிக்கல் நாட்டு விழாவிற்கு இலங்கை ஜனாபதி மஹிந்த ராஜபக்ஷ செல்லவுள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் சிங்கள இராணுவத்திற்கு தமிழகத்தில் பயிற்சி அளித்தல் மற்றும் நிலக்கரி ஊழல் புரிந்த மத்திய அரசை க்ண்டித்தும் இலட்சிய தி.மு.க.சார்பில் சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதன்போது கட்சியின் தலைவர் டி.ராஜேந்தர் உரையாற்றும் போது தமிழகத்தில் சிங்கள இராணுவத்திற்கு பயிற்சி அளிப்பதற்கு முதலமைச்சர் கண்டனம் தெரிவித்த பின்னும் எதிர்கட்சிகள் எதிர்த்து குரல் கொடுத்த பின்னும் மத்திய அரசு கண்டு கொள்ளாமல் இருக்கிறது. இதற்கு தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாததுதான் காரணம் என்று கூறினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது; ஏர் ஏறாது; காளை இழுக்காது எனினும் பாறை பிளந்து பயன்விளைவிப்பான் என்ஊரான்.

– மகாகவி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இடப்பெயர்வு தந்த இழப்பிலும் ஊர்ப்பாசம் இழந்தது கொடுமையல்லோ!

ஒருகாலத்தில் எங்கள் வாழ்விடங்களில் இருந்த நாற்சார வீடுகளை இன்று காண முடியவில்லை.

தமிழர்களின் கூட்டுக் குடும்ப வாழ்வை அடையாளப் படுத்திய நாற்சார வீடுகளின் மறைவுகள் எங்கள் கூட்டுக் குடும்ப உறவுக்கு முடிவு கட்டியதெனலாம்.

முன்பெல்லாம் தாய்வழி, தந்தைவழி உறவுகள் பிள்ளைகளின் ஒழுக்கம், கல்வி, அவர்களின் மேம்பாடு தொடர்பில் அதீத கரிசனை காட்டி வந்தன.

எனினும் யுத்தகால சூழல் நமக்கு அளித்த இடப்பெயர்வுகளும் வெளிநாட்டுத் தொடர்புகளும் எங்களை எங்கள் உறவுகளில் இருந்து அந்நியப்படுத்திவிட்ட சோகம் சொல்லிமரளா.

தாய்மாமனை, பெரியதந்தையை, ஒன்றுவிட்ட சகோதரனை இனங்காண முடியாத அளவில் ஓர் இளம் சமூகம் எங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்ற துர்ப்பாக்கி நிலைமைகளுக்கு அப்பால், தங்கள் உறவுகளை அறிய வேண்டும் என்ற மனநிலை இவர்களுக்கு மருந்துக்கும் இல்லாமல் போய்விட்டமை மிகப்பெரும் துன்பம்.

சமகாலத்தில் எங்கள் இளம் சமூகத்தை எடுத்துக் கொண்டால் ஒற்றைக் காதில் தோடு குற்றுவது, தாடியை வெட்டி முகத்தில் கோலம் போடுவது, நூற்றெட்டு பொக்கற்றுகள் கொண்ட காற்சட்டை அணிவது, கையடக்கத் தொலை பேசியில் காலம் கழிப்பது என்ற அர்த்தமற்ற செயல்களுக்குள் மூழ்கிக்கிடக்கின்றது.

இந்தத் துன்பங்கள் எப்படித்தான் எங்கள் அருமந்த இளைஞர் சமூகத்திடம் பற்றிக் கொண்டதோ என்று ஏங்கி நிற்கும் வேளையில்; பெற்றோர்களின் கண்காணிப்பில், பாடசாலைகளின் மேற்பார்வையில், ஊர் சமூகக் கட்டுப்பாட்டில் இன்றைய இளம் சமூகம் இல்லையென்ற உண்மையையும் இவ்விடத்தில் நினைவுபடுத்துவது மிகவும் அவசியமானது.

போர்க் காலக் கொடுமைகள் ஏற்படுத்திய தாக்கங்கள், வெளிநாட்டுச் சம்பாத்தியங்களின் ஊடுறுப்புகள், கட்டுப்பாட்டின் எல்லைகளின் உடைப்புகள் எங்கள் இளம் சமூகத்தை பாதை மாறிப் பயணிக்க வைக்கிறது என்பதற்கு அப்பால் எங்கள் ஊர் பாடசாலைகளில் கல்வி கற்பது பெருமைக்குரிய விடயமன்று.

பாடசாலைகளின் பெயரில் எங்கள் பெருமை தங்கியுள்ளது என்ற நினைப்பு எங்கள் பெற்றோர்களிடமும் பிள்ளைகளிடமும், ஊர் சமூகத்திடமும் என்று ஏற்பட்டதோ அன்று பிடித்த நாசகாரத்தின் விளைவுதான் எங்கள் இளைஞர்களின் பாதை மாறிய பயணிப்பு என்பதை நாம் ஒருபோதும் புறந்தள்ளிவிடலாகாது.

நாம் பிறந்த மண்ணில் எந்தையும்தாயும் கற்ற பள்ளியில், நாம் படிப்பதென்பது மிகப் பெரிய பண்பாட்டு விடயம் மட்டுமல்ல ;அதற்குள் இருக்கக்கூடிய ஆத்மார்த்தமான பற்றுதல்களும் பாசப் பிணைப்புகளும் எங்கள் ஊர் மீது, உறவு மீது, சமூகத்தின் மீது இனம்புரியாத இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளும்.

மாலைப்பொழுதில் எங்கள் ஊரில் சுற்றித் திரிகின்ற சுகத்தை இழந்து காலிமுகத்திடலின் கடற்கரையோரத்தில் ஊழைச்சதையின் நிறை குறைப்புக்காக நடைபயிலும் நாகரிகத்தில் எங்கள் வீட்டுப்பிள்ளை ஒற்றைக்காதில்கடுக்கன்பூட்டுவதில்என்னதவறுஉண்டு?

ஓ எனதருமை தமிழ்ச் சமூகமே! உன் முற்றத்து மாமரம் தந்த கனியின் சுவை மறந்தால், கடற்கரை வெளியின் காற்று எங்கள் உடலின் நோய் தீர்த்த உண்மையை மறந்தால், சொந்த மண்ணில் நெல் விதைத்து சிறுதானியம் வளர்த்து கமத்தொழில் செய்து உடற்பயிற்சி செய்த உண்மையை மறந்தால், மூலிகை உண்ட பசுவின் பால்கறந்து பருகிய இன்பத்தை இழந்தால் எப்படி எங்கள் இளம் சமூகம் அதை அறியும்?

முதலில் நாம் பிறந்த வளர்ந்த ஊருக்குப் போவோம். எங்கள் தாய்மண்ணில் சுவாசிப்போம். ஊர்ப் பள்ளியை காலத்திற்கு ஏற்றவாறு வளர்த்தெடுப்போம். இதுதான் தமிழர்களின் வாழ்வு வளம்பெற ஒரேவழி.

மீள்குடியேற்றம் என்பது வறுமைக்கும் ஏழ்மைக்குமானது என்றால் ஊரில் உள்ள எங்கள் நிலத்தை பற்றைகளின் இருப்பிடமாக்கி என்றே ஒருநாள் தூரத்தில் நின்று அதைத் தரிசித்து அன்று இரவே கொழும்பு பஸ் ஏறுவது என்றால் தமிழினம் என்ற சொற்பதம் நீண்ட காலத்திற்கு சொல் அகராதியில் நிலைக்காது என்பது நிறுத்திட்டமான உண்மை.

## மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அதிகாரிகள் அயராது பாடுபட வேண்டும்

### யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிகளைக் கொண்டு வாழ்க்கையை முன்னேற்றிக் கொள்ள வேண்டும் என யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி வீட்டு லொத்தரில் வெற்றிபெற்றவர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பல்வேறு வகையான திட்டங்கள் ஊடாக அபிவிருத்திப் பணிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்பெறுகின்றனர்.

இதுதவிர சமுர்த்தி அதிகார சபை போன்றவற்றினாலும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அதிகாரிகள் அய ராது பாடுபட வேண்டும் எனவும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் பண உதவிக ளை கொண்டு நீண்டகாலம் நிலைத்து நிற்கக் கூடிய வகையில் நிரந்தர பயன்தரக் கூடிய திட்டங்களை பயனாளிகள் மேற்கொள்ளவேண்டும். அப்போதுதான் உதவிகள் வழங்குவதற்கான பயனை அடைய முடியும்என அவர்மேலும்தெரிவித்தார். (ந-6)

## கீரிமலை கமநல சேவை நிலையத்திற்கு விவசாய உபகரணங்கள் வழங்கல்

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவின் கீரிமலை கமநல சேவை நிறுவனத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கான விவசாய உபகரணங்களை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்தார்.

தெல்லிப்பழையில் அமைந்துள்ள கீரிமலை கமநலசேவைகள் நிலையத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் இவ் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

நடப்பாண்டில் விவசாய நம்பிக்கை நிதியத்தின் ஊடான வேலைத் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 400 மண்வெட்டிகள், 96 நீர்பாய்ச்சும் குழாய்கள் உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப் பட்டன.

இதேவேளை இம்மாவட்டத்தின் ஏணைய பகுதிகளிலும் 5 ஆயிரம் மண்வெட்டிகளும் ஆயிரம் முள்ளுக்கம்பிச் சுருள்களும் வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் விவசாயத்தை ஊக்குவித்து அது சார்ந்த சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கீரிமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்நிகழ்வு அங்குரார்ப்பண வைபவம் என்றும் இது ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-9)

## வவுனியாவில் முதலீட்டுக் கருத்தரங்கு

பங்குச்சந்தையில் முதலீடுசெய்ய சரியான முறையில் கற்றுக்கொள்ள வழியமைக்கும் பங்குச் சந்தை முதலீடுகள் தொடர்பான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை வவுனியா ரோயல் கார்டினில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 021 2221455 என்ற தொலைபேசி மூலம் அறிந்து கொள்ள முடியும் என கொழும்பு பங்குச்சந்தையின் யாழ். கிளையின் முகாமையாளர் மு.திலீபன் அறிவித்துள்ளார். (ந)

## சிறுவர் இல்லங்களில் உளசமூக மேம்பாடு

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்திலுள்ள 15 சிறுவர் இல்லங்களில் உளசமூக மேம்பாட்டு நிகழ்வுகள் நேற்று தொடக்கம் எதிர்வரும் ஒக்டோபர் 9ஆம் திகதி வரை வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் நடத்தப்படவுள்ளதாக அதிகாரசபையின் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி த.செல்வக்குமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்உளசமூகமேம்பாட்டுநிகழ்வுகளில் **Art Therapy, Creative Therapy** மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளது. இதன்மூலம் சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களுடைய உளசமூக மேம்பாட்டினை ஏற்படுத்தும் வகையில் நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதுடன் சர்வோதயா நிறுவனத் தின் உதவியுடன் வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். (அ-9-266)

## சிறப்பு பட்டிமன்றம்

அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றத்தின் சிறப்பு பட்டிமன்றம் நாளை சனிக் கிழமை கனகராயன்குளம் இளந்தாரி ஐயனார் கோவிலின் வருடாந்த பொங்கல் விழாவில் நடைபெறவுள்ளது.

தமிழர்தம்பண்பாட்டைபேணுவதில்அதிக அக்கறை எடுப்பவர்கள் ஆண்களா? பெண்களா? என்ற தலைப்பில் நடைபெறவுள்ள இப் பட்டிமன்றத்துக்கு நடுவராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி பங்குபற்றவுள்ளதுடன் இதர பேச்சாளர்களாக கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இ.இராஜேஸ்கண்ணன், தி.செல்வமனோகரன், ஆசிரியர் எஸ்.காந்தரூபன், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா மற்றும் மக்கள் வங்கி உத்தியோகத்தர் சி.சஞ்சீவன் உள்ளிட்டோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-9)




நமது மனம் பக்தியால் பரவசப்பட்டு நிற்கும்போது நாம் பேசுகின்ற மொழியும் தனித்துவமாக அமையும். இறைவன் திருவுருவைத் திருக்கோயிலிலே காணும்போது ஏற்படும் உணர்வை வெளிப்படுத்தச் சொன்மாலை பாடிய அடியார்கள் பலர் உளர். தேவாரம் பாடிய மூவர் தமிழ்மாலைகள் இதற்குச்சான்றாகும். கோல அழகைக் காணும்போது அக்காட்சியை உரைப்பதற்கு மொழி துணை செய்கிறது. பக்திப்பாடலின் பிறப்பிடம் இதுவே யாகும்.

மணிவாசகருடைய பக்தியனுபவத்தை இன்று நாம் உணர அவருடைய பாடல்களே உள்ளன. இறைவனை நேரில் காணும்பேறுபெற்ற மணிவாசகருடைய உள்ளத்தில் பொங்கும் பக்தி சொற்களாகப் பாடல்களில் பயின்று வருவதை நோக்கும்போது எமக்கும் ஒரு சிலிர்ப்பு உண்டாகிறது. இறைவனை தேனே, அமுதே, கரும்பின் தெளிவே, தித்திக்கும் மானே எனப் பலவாகக் காண்கிறார். தேன், அமுது, கரும்பின் சாறு என்னும் மூன்றும் வேறுபட்டனவாக இருந்தாலும் தித்திப்பானவை. தேன் நினைத்தாலே இனிமை தருவது. மூன்றும் நாம் சுவைத்து இனிமையை உணரமுடியும். இதனால் மூன்றையும் சுவைக்கும் போது அவற்றிடையே வேறுபாடுகருப் பதை நன்கு உணரமுடியும். தேன் பூக்களிலிருந்து தேனீக்களால் சேகரிக்கப்படுவது அமுது என்பது நாம் தெய்வமடைக்காகச் செய்யும் இனிமையான சர்க்கரை அமுதை இன்று குறித்து நிற்கிறது. கருப்பஞ்சாறு கரும்பு என்னும் செடியிலிருந்து பெறப்படுவது. உணவின் சுவையோடு இறைவன் தரிசனத்தை ஒப்பிடுவது ஒரு மனித நிலையான செயற்பாடாக உள்ளது. உலகியல் இன்பங்களில் நாவின் சுவையைக் கட்டுப்பாடு செய்வது பலருக்குக் கடினமாக உள்ளது. மனம் பொறி வழிச் செல்லாது நிற்றற் பொருட்டு உணவைச் சுருக்கியேனும் விடுத்தேனும் இருக்கும் முறைமையாகிய விரதம் பலராலும் இன்றும் அனுட்டிக்கப் படுகிறது. மணிவாசகரும் சுவைபற்றிய உணர்வையே முன்னிறுத்தி இறைவனைப் பாடியுள்ளார். *மானே* என்ற சொல் மகான் என்ற சொல்லின் திரிபாக உள்ளது. *தித்திக்கும் மானே* என்பது இனிமை தரும் பெரியோனே எனப் பொருள் தரும். தேன், அமுது, கரும்பின் தெளிவு என்பன அறிவு இச்சை செயல்களுக்கு இன்பந்தருவன என்பதைக் குறிப்பனவாகும் என உரையாசிரியர்கள் கூறுவர்.

இவ்வாறு இனிமையான உணர்வைத் தருகின்ற இறைவனைச் சேர முடியாமலிருப்பதற்கு மணிவாசகர் ஒரு காரணத்தைக் கூறியுள்ளார். *யானே பொய். என் நெஞ்சும் பொய். என் அன்பும் பொய்* எனத் தன்னுடைய உண்மை நிலையை உரைத்துள்ளார்.

அவர் தன்னைப் பொய் என்று கூறியது நிலையற்ற உலக வாழ்வுடைமை பற்றியதாகும். நெஞ்சைப் பொய் என்று கூறியது ஓரிடத்து நிலை பேறின்றி அலையும் நிலைமை பற்றியதாகும். தன்னுடைய அன்பைப்பொய் என்று கூறியது எண்ணெய் ஒழுக்குபோல இடையீடின்றி நிகழாது அன்பு இடையறுதலாகும். ஆனால் இறைவனை அடைய அவர் ஒரு வழியையும் கூறியுள்ளார். ***வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே*** என்பதே அவர் கூறும் வழியாகும். இறைவனை நினைந்து மனங் கசிந்துருகிக் கண்ணில் நீர் சோர வழிபட்டால் அவனருள் நிச்சயமாகக் கிடைக்கும்.

*யானே பொய் என் நெஞ்சும் பொய்*
*என் அன்பும் பொய்*
*ஆனால் வினையேன் அழுதால்*
*உன்னைப் பெறலாமே*
*தேனே அமுதே கரும்பின்*
*தெளிவே தித்திக்கும்*
*மானே அருளாய் அடியேன்*
*உனை வந்துறுமாறே*

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன்னார் பிறீமியர் லீக் கிரிக்கெட் போட்டி; இந்து முன்னணி, யங் ஸ்டார் வெற்றி

மன்னார் பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக் கழகத்தி னால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படும் 10 ஓவர்கள் கொண்ட மன்னார் பிறீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி அண்மையில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

36 போட்டிகளைக் கொண்ட போட்டியில்9 ஆவது போட்டியா னது இந்து முன்னணி அணிக்கும் சென். அன்ரனிஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் நாணய சுழற்சி யில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்து முன் னணி அணியினர் 10 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களை பெற்றனர். துடுப்பாட்டத்தில் இந்து முன் னணி அணி சார்பாக ரஞ்சித் 9 பந்துகளில் 14 ஓட்டங் களையும் ஜெகன் 6 பந்துகளில் 10 ஓட்டங்களையும் பெற்ற னர்.

பந்து வீச்சில் சென். அன்ரனிஸ் அணிசார்பாக ஜோசியஸ் 3 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் நிலு ஒரு ஓட்டத்திற்கு 2 இலக்குகளையும் ஜெரோன், அகிலன், லஜீப் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய சென். அன்ரனிஸ் அணியினர் 10 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 59 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தனர். துடுப்பாட்டத் தில் சென். அன்ரனிஸ் அணி சார்பாக சுகந்தன் 18 பந்துக ளில் 22 ஓட்டங்களையும் பிரதீப் 18 பந்துகளில் 13 ஓட்டங்க ளையும் பெற்றனர். பந்து வீச்சில் இந்து முன்னணி அணி சார்பாக தர்சன் 9 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் லூயிஸ் மற்றும் லீன்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக் கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

10 ஆவது போட்டியானது யங் ஸ்டார் அணிக்கும் ஏசியன் அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யங் ஸ்டார் அணியினர் ஏசியன் அணியை துடுப்பெடுத்தாட பணித்தனர். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஏசியன் அணியினர் 9.4 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 60 ஓட்டங்களை பெற்றனர்.


துடுப்பாட்டத்தில் ஏசியன் அணிசார்பாக குரு 19 பந்துக ளில் 17 ஓட்டங்களையும் செல்வம் 4 பந்துகளில் 7 ஓட்டங் களையும் அதிக பட்ச ஓட்டங்களாக பெற்றனர். பந்து வீச்சில் யங் ஸ்டார் அணிசார்பாக சுஜந்தன் 15 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வேங்கை 8 ஓட்டங்களுக்கு 2 இலக்கு களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யங் ஸ்டார் அணியினர் 8.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கினை அடைந்தனர். துடுப்பாட்டத்தில் யங் ஸ்டார் அணி சார்பாக சுஜந்தன் 22 பந்துகளில் 37 ஓட்டங்களையும் தன்சன் 17 பந்துகளில் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஏசியன் அணி சார்பாக குரு 7 ஓட்டங்களுக்கு 3 இலக்கு களையும் சருஜன் மற்றும் செல்வன் ஆகியோர் தலா ஒவ் வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# கைதடி குமரன் வி.க.வெற்றி

புத்தூர் கலைமதி வி.க. நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான பிரிவு -B அணிகளுக்கு இடையில் நடத்தும் செற்றப் முறை யிலான கரப்பந்தாட்ட போட்டியில் நேற்று முன்தினம் இரவு புதன்கிழமை 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கைதடி குமரன் வி.க. எதிர் சிறுப்பிட்டி ஜனசக்தி வி.க. மோதியது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் கைதடி குமரன் வி.க. 21:25, 25:20, 28:26 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

# கிளிநொச்சியில் வடமாகாண தடகளம்





வடமாகாண தடகள விளையாட்டுப் போட்டி எதிர்வரும் இன்று வெள்ளிக்கிழமை, நாளை சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம் பெற வுள்ளது.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம், கிளி நொச்சி முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட் டங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் கலந்து கொள் ளவுள்ளனர்.

வருடம்தோறும் நடைபெறும் இம் மாகாண மட்டத் தட களப் போட்டி இம்முறை கிளிநொச்சியில் நடைபெறவு ள்ளது. இப்போட்டி நிகழ்வுக்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி மாவட்ட செயலக வடமாகாண விளையாட்டுத் திணைக்களத் துடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றது குறிப்பிடத்த க்கது.

# மாட்டுவண்டி சவாரிப் போட்டி



மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியொன்று அண்மை யில் ஆவரங்கால சவாரித் திடலில் இடம்பெற்றது.

அச்சுவேலி பத்தைமேனியைச் சேர்ந்த அமரர் கிருஷ் ணபிள்ளை கணேசமூர்த்தி (ஒடிகனேஸ்) அவர்களின் 10 ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட இம்மா பெரும் போட்டியில் எழுபதிற்கும் மேற்பட்ட சோடி காளை கள் தங்கள் வீரத்தினை காட்டின. ஏராளமான மாட்டு வண்டி சவாரி ரசிகர்கள் இப்போட்டியில் கலந்து கொண் டார்கள். நான்கு பிரிவுகளாக நடத்தப்பட்ட இப்போட்டியில் பெறுமதி வாய்ந்த பரிசுகள் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டது.

நீர் இறைக்கும் இயந்திரங்கள் உட்பட பெறுமதியான விவசாய உபகரணங்கள் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டது.

# உதைபந்தாட்ட முடிபுகள்

யாழ். உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் இளவாலை சென். லூப்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் பிரான்சிஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளது விபரங்கள் வருமாறு,

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலக்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இப் போட்டியில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.


கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவா ந்துறை சென். நிக்கிலஸ் அணி களமிறங்கியது. இப் போட்டியில் நாவாந்துறை சென். நிக்கிலஸ் விளையாட் டுக்கழக அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.



சண்டே ஒப்சேவரும் -மொபிட்டலும் இணைந்து வடமாகாண 19 வயது பிரிவுக்கான கிரிக்கெட் விருது வழங்கும் நிகழ்வை அண்மையில் நடத்தியது. இதில் இரண்டாம் இடத்தினை பெற்ற யாழ்ப்பாண சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினரை [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவை வீழ்த்தியது இங்கிலாந்து



(எட்ஜ்பஸ்டன்)

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

மழையால் பாதிக்கப்பட்ட இப்போட்டியில் இங்கிலாந்து அணி 28 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

எட்ஜ்பஸ்டனில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

11 ஓவர்கள் கொண்ட போட்டியாக இடம் பெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 11 ஓவர்களில் 118 ஓட்டங்களைக் குவித்தது.

ஆரம்பத்திலிருந்தே அதிரடியாக ஆடிய இங்கிலாந்து அணி ஒரு புறமாக விக்கெட்டுக்களை இழந்த போதிலும், அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

குறிப்பாக 4-வது விக்கெட்டுக்காக 2 ஓவர்களில் 48 ஓட்டங்கள் குவிக்கப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக கிறேய்க் கீஸ்வெட்டர் 32 பந்துகளில் 50 ஓட்டங்களையும், ஜோஸ் பட்லர் 10 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மோர்னி மோர்க்கல், ஜொகன் போத்தா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், வெய்ன் பார்னெல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

11 ஓவர்களில் 119 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 11 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 28 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

சீரான இடைவெளிகளில் விக்கெட்டுக்களை தொடர்ந்து இழந்த தென்னாபிரிக்க அணி, எந்தவொரு கட்டத்திலும் இலக்கைப் பெற்றுக்கொள்ளும் நிலை காணப்பட்டிருக்கவில்லை.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஹசிம் அம்லா 27 பந்துகளில் 36 ஓட்டங்களையும், அல்பி மோர்க்கல் 14 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ரிம் பிரஸ்னன், கிரேம் சுவான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், டனி பிறிக்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

3 போட்டிகள் கொண்ட இத் தொடரின் முதல்போட்டி மழை காரணமாக கைவிடப்பட, இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றிருந்தது.

எனவே இத் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் முடிபடைந்துள்ளது.

போட்டியின் நாயகனாக ஜோஸ் பட்லரும், போட்டித் தொடரின் நாயகனாக கிறேய்க் கீஸ்வெட்டரும் தெரிவாகினர்.

## ஐ.நா.அதிகாரிகள்...

ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் ஆலோசனைப்படியே தொழில்நுட்ப அதிகாரிகள் குழுவினர் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்கின்றனர்.

அண்மையில் சூடான் ஜனாதிபதி அல் பஷீருக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னணியில் இருந்து குற்றவியல் விசாரணை செய்தவரான மெகாலி என்பவரே இக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனால் இக்குழுவின் விஜயம் இலங்கை அரசிற்கு அச்சத்தை உண்டுபண்ணியுள்ளது.

இக்குழுவில் இவரது நியமனம் தொடர்பில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

எனினும் ஐ.நா. அதிகாரிகளின் இன்றைய வருகையை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் இக்குழுவினரால்; தருஸ்மன் குழுவின் அறிக்கை தொடர்பாக சிறிய விசாரணை ஒன்று நடத்தப்படும். இதன்மூலம் தருஸ்மன் குழுவின் அறிக்கைக்கு அங்கீகாரம் வழங்கப்படும்.

ஏற்கெனவே எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச நாடுகளின் மனித உரிமை நிலைவரங்கள் தொடர்பான விசாரணைகள் குறித்த ஆரம்ப கூட்டத் தொடருக்கு இலங்கைக்கு எதிராக 47அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளன.

ஜெனிவாவில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தின் தகவல்களின்படி இந்த நிறுவனங்கள் மெகாலி குழுவினரை கொழும்பில் சந்தித்து சாட்சியங்களை வழங்கவுள்ளன.

மெகாலி தான் தங்கும் விடுதி அறையை அவரது அலுவலகமாக மாற்றிக் கொள்ள அனுமதி உள்ளது.

யேமன் மற்றும் மொரோக்கோ ஆகிய நாடு களில் இவர்கள் இவ்வாறே செய்தனர்.

எனினும் அண்மையில் இவர்கள் சிரியாவிற்கு நுழைய அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத் தலைவர் கூறுகையில்,

மெகாலி குழுவினர் அமெரிக்காவின் யோசனையை செயற்படுத்தவே இலங்கை வருகின்றனர் என்பது மிகவும் தெளிவானது.

இந்தப் பயங்கரமான நிலைமையை மூடி மறைக்க அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை நாம் மீண்டும் ஒருமுறை வன்மையாகக் கண்டிப்பதுடன் எதிர்கால ஆபத்துக் குறித்தும் எதிர்வுகூறுகிறோம் என குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார். (ந-11)

## பொது நல...

றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோர் வரவேற்றனர்.

பின்னர் இந்தக் குழுவினர் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதிக்கு வருகை தந்தபோது அங்கு வட மாகாண அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் ஆளுநரின் செயலாளரினால் விளக்கமளிக்கப்பட்டது.

பின்னர் இந்தக்குழுவினர் யாழ்.பொது நூலகத்திற்குச் சென்றனர். அங்கு அவர்களுக்கு முறைப்படி வரவேற்பளிக்கப்பட்டது.

பின்பு இந்தக் குழுவினர் அரியாலை, மறுவன்புலவு போன்ற பகுதிகளுக்கும் விஜயத்தினை மேற்கொண்டனர்.

இதன்பின்பு கிளிநொச்சி மாவட்டத்திற்கும் இந்தக் குழுவினர் சென்றிருந்தனர். (ந-6)

## ஜனாதிபதி...

தும் இலங்கையின் நான்காவதுமான சுரங்கப் பாதை கடந்த 3-ம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

சுமார் இரண்டு கோடி ரூபாய் செலவில், பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவின் நிதியொதுக்கீட்டில், அமைக்கப்பட்ட இச்சுரங்கப் பாதையின் உட்புறத்தின் இரு சுவர்ப்பகுதியிலும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினதும், குடும்பத்தவரினதும் அரசியல், சமூக வேலைத் திட்டங்களை நினைவுகூரும் வகையில் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இப்புகைப்படங்களே நேற்று இனந்தெரியாதவர்களினால் சேதமாக்கப்பட்டுள்ளன. (ந-11)

## பிரபாகரனின்...

உள்ள குறித்த வீட்டின் பின்புறத்திலிருந்து ஆரம்பிக்கும் பதுங்குகுழி சுமார் 300 மீற்றர் தொடக்கம் 400 மீற்றர் வரையில் நிலத்திற்கு கீழ் கொங்கிறீற்றால் அமைக்கப்பட்டுள்ளது. மேலுள்ள வீடு செங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டில[illegible]போதே இறுதி யுத்தத்தின் போது தேசியத் தலைவர் சுற்றிவளைக்கப்பட்டதாக படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்தப் பகுதியில் மக்கள் மீள் குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த வீட்டை சென்று பார்க்க முடிகின்றது. எனினும் உள்ளே சென்று பார்ப்பதற்கு இன்னமும் அனுமதிக்கப்படவில்லை.

ஏனெனில் இறுதி யுத்தத்தின்போது குறித்த வீட்டையும் பதுங்குகுழியும் விடுதலைப்புலிகளால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டிருக்கிறது.

இதனால் உள்ளே என்ன இருக்கிறது என்பதை படையினர் கூட இன்னமும் அவதானிக்கவில்லை என கூறப்படுகின்றது.

இதனால் நுழைவாயில் அடைக்கப்பட்டிருக்கிறது. எனினும் இடையில் படையினர் துளையிட்டு பார்த்துள்ளனர்.

மேலும் இதனுள்ளிருந்து துர்நாற்றம் ஆரம்பத்தில் வீசியதாகவும் படையினர் குறிப்பிட்டனர். (ந-11)

## பீரிஸ்-பிளேக் நேற்று...

இதற்கமைய கொழும்பில் தங்கியிருக்கும் பிளேக், ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட அரசின் முக்கிய தலைவர்களைச் சந்தித்து நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்து ஆராய்வார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைவாக வெளிவிவகார அமைச்சில் நேற்று முற்பகல் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கும் ரொபோர்ட் ஓ பிளேக்கிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் வடக்கு-கிழக்கின் தற்போதைய நிலைமைகள், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அமுலாக்கம், தேசிய பிரச்சினைக்கான அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் இறுதிக்கட்டப் போர் இடம்பெற்ற வன்னிக்கும் நேரடியாக விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளையும் ஆராயவுள்ள அவர், அரசசார்பற்ற அமைப்புக்களின் முக்கியஸ்தர்களையும் சந்தித்து தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளார்.

அது மாத்திரமன்றி இம்முறை தனது விஜயத்தின் போது இலங்கை வர்த்தகர்கள் குழு ஒன்றையும் அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ரொபோர்ட் ஓ பிளேக், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை நீர்ப்பாசன அமைச்சில் வைத்து நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் குறித்து பேசப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளாததன் காரணமாகவே அதன் பணிகள் தாமதமாகி வருவதாக அமைச்சர் நிமால், அமெரிக்க உதவி இராஜாங்க செயலரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பிரதிநிதிகளை இன்று நியமித்தால், தெரிவுக்குழுவின் பணிகளை நாளை முதல் ஆரம்பிக்க முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத்தவிர, வட மாகாணத்தில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் அபிவிருத்திப் பணிகள், மீள்குடியேற்றம் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிசேல் சீசனும் கலந்து கொண்டார். (ந-11)


ஆங்கில மொழியை
இரண்டாவது மொழியாகக் கற்பது எவ்வாறு?
HOW TO LEARN
ENGLISH
AS A SECOND LANGUAGE?
மொழிகளை கற்றுப் பயன்படுத்துவதற்குரிய அடிப்படை உத்திகள் யாவை?
WHAT ARE THE TECHNIQUES FOR LEARNING AND USING LANGUAGES?
நாளை சனிக்கிழமை(15.09.2012)
பி.ப.3.30 - 5.00
இலவச பயிற்சிப் பட்டறையில்
பங்குபற்றி அறிந்துகொள்ளுங்கள்
YAALH ENGLISH ACADEMY
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி : யாழ்நகர்
விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்
(416)



சகல குத்தகைக்கு பயிர்செய்ய விரும்புபவர்களுக்கான அறிவித்தல்

**உருத்திரபுரீசுவரர் ஆலயக் காணிகள்**

30.08.2012 வரை காசு கட்டுமாறு கொடுக்கப்பட்ட திகதி 25.09.2012 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது என்பதை தங்களுக்கு அறியத்தருவதுடன் இது தொடர்பாக தாங்கள் காசுகட்ட விரும்பின் எமது பொருளாளர் திரு.மா.பேரம்பலம் அவர்களிடமோ அல்லது தலைவர் திரு.தி.இராசநாயகம் அவர்களிடமோ தொடர்புகொண்டு பணத்தைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**இவர்களது தொலைபேசி இலக்கம் வருமாறு;**

தலைவர் : 077-0604950

பொருளாளர்: 0776988691

ஏற்கெனவே இடப்பட்ட விளம்பரத்தின் நிபந்தனைகள் அனைத்தும் தொடர்ந்தும் இருக்கும். எக்காரணம் கொண்டும் தனிப்பட்ட முறையில் காணிகள் வழங்கப்படமாட்டாது. குலுக்கல்முறையில் மட்டுமே காணிகள் வழங்கப்படும் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

நன்றி

தி.இராசநாயகம்
தலைவர்
உருத்திரபுரீசுவரர் ஆலயம்

(சி-1045)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் குற்றங்களிற்கு...

ஜெயலலிதா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசியதாவது, இலங்கை அப்பாவித் தமிழர்கள் மீது போர்க் குற்றங்களை நிகழ்த்தியவர்களை போர்க்குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும், தற்போது இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பி சிங்களவர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகை செய்யும் வரையில், அனைத்து குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும்வரையில் மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின் மீது பொருளாதார தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் துணிச்சலுடன் தீர்மானம் நிறைவேற்றினேன்.

இலங்கை இராணுவத்தினருக்கு தமிழ் நாடு உட்பட இந்தியாவில் எங்கும் பயிற்சி அளிப்பதை மத்திய அரசு கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தினேன்.

இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் இன்னமும் கிடைக்கவில்லை என்பதால், அதற்கு நம் தமிழகத்தின் எதிர்ப்பை, உணர்வுகளை தெரிவிக்கும் வகையில் இலங்கையைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு தமிழகத்தில் பயிற்சி அளிப்பதை தடை செய்தேன்.

இவை காரணமாக, தமிழக மக்கள் மட்டுமல்லாமல், உலக வாழ் தமிழர்களும் எனது அரசின் நடவடிக்கைகளை பாராட்டி வருகின்றனர்.

எனினும் இலங்கையிலிருந்து சுற்றுலா, ஆன்மீகப் பயணம் போன்றவற்றிற்காக தமிழ் நாட்டிற்கு வருகை புரியும் சிங்களவர்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படக் கூடாது என்பதில் எனது அரசு உறுதியுடன் செயற்பட்டு வருகிறது.

ஆனால், தன்னலம் காரணமாக தன் மானத்தை இழந்து இலங்கையில் தமிழினம் அழிய காரணமாக இருந்தவர், இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பது போல் நாடகமாடுகிறார்.

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட போது, இலங்கை அரசுக்கும், இராணுவத்திற்கும் ஆதரவாக மத்திய அரசு செயல்பட்டது.

தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய இடங்களில் மீன்பிடிப்பதை தடுக்கும் வகையில் அவர்கள் மீது இலங்கைக் கடற்படை தொடர்ந்து தாக்குதல் நடத்திவருகிற நிலையில், அதற்கு ஒரு வலுவான எதிர்ப்பினை மத்திய அரசு தெரிவிக்கவில்லை.

இருப்பினும், மத்திய அரசை எதிர்த்து கேள்வி கேட்க இயலாதவர், இலங்கை தமிழர்களுக்காக என கூட்டப்பட்ட கூட்டத்தின் பெயரையே மாற்றிவிட்டார்.

இவ்வாறு தமிழர் மானத்தை காப்பாற்றுபவர் தான் இலங்கைத் தமிழர் நலன் காக்கும் எனது அரசின் நடவடிக்கையைக் கண்டிக்கிறார். தன்மானம் பெரிது என்று வாதாடுபவன் தான் தமிழன். அப்படி தன்மானம் உள்ளவர்கள் இலங் கைத் தமிழர்கள் பற்றி பேசலாம் மற்றவர்கள் பேசாமல் இருப்பது நல்லது.

தன்நலம் காரணமாக தன்மானத்தை இழந்தவர்கள் இலங்கைத் தமிழர்கள் நலனை சீர்குலைக்கும் இலங்கை அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் எனது நடவடிக்கைகளுக்கு களங்கம் கற்பிக்காமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார் ஜெயலலிதா. (ந-11)

# கிழக்கு மாகாண ஆட...

இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக்கிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்குமிடையில் நேற்றுக் காலை சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. கொழும்பில் நேற்றுக்காலை இடம் பெற்ற இந்த சந்திப்பானது சுமார் ஒரு மணித்தியாலம் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் போது நடந்துமுடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிபு குறித்து பிளேக் அக்கறையுடன் கேட்டறிந்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக்குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள றொபேர்ட் ஓ பிளேக்குடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுக் காலை சந்திபொன்றை மேற்கொண்டது.

இந்த சந்திப்பில் முதலாவதாக பிளேக் எடுத்துக்கொண்ட விடயமே கிழக்குமாகாண சபைத் தேர்தல் தான். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றி குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

அத்துடன் தற்போது கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைப்பது தொடர்பில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமைகள் குறித்தும் அவர் கேட்டார். அதற்கு நாம் உரிய விளக்கங்களை வழங்கியுள்ளோம்.

தொடர்ந்து அரசியல் தீர்வு விடயம், வடக்குக் கிழக்கில் மீள்குடியேற்றம், தடுப்பில் உள்ள தமிழ் இளைஞர்கள் குறித்தும் காணாமல் போனோர் குறித்தும் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன் இராணுவ ஆக் கிரமிப்பு, காணி சுவீ கரிப்பு மற்றும் இவற்றில் அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் குறித்தும் அதில் உள்ள குறைபாடுகள் குறித்தும் பிளேக்கிற்கு நாம் விளக்கமளித்துள்ளோம் என்றார். (ந-11)

# சர்வதேசத்...

ஹார்ட் எம்.பி. மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நல்லிணக்க செயல்முறைக்கான தொழில்நுட்ப உதவிகளை பொதுநலவாயம் வழங்கும் எனக் கூறிய அவர், தனது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் ஆற்றலில் பொதுநலவாயம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் தான் அர்ப்பணிப்புடன் இருப்பதை சர்வதேச சமூகம் நம்பச் செய்வதற்கு அரசாங்கம் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் கூறினார்.

நாட்டின் அனைத்து சமூகத்தினருக்கும் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான செயன்முறைக்குகாலவரையறை ஏற்படுத்தபட வேண்டுமெனவும் அவர் கோரினார். வெளிப்படைத் தன்மை, சமாதானம், சமத்துவம் என்பன ஜனநாயக ஸ்திரத்தன்மை மூலம் வலுப்படுத்தப்பட வேண்டும். எமது மாநாட்டின் கட்டமைப்புக்குள், இதற்கான உத்தரவாதத்தை பொதுநலவாய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர் பார்ப்பார்கள் என அவர் கூறினார்.

இலங்கையின் இறையாண்மையை அத்துமீறுவதற்கு பொதுநலவாயம் முற்படவில்லை எனவும் ஆனால் வெற்றிகரமான உள்நாட்டுத் தீர்வு பூர்த்தியாக்கப்படுவதை காண விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். (ந-2)

# சட்டவிரோத...

67 பேர் கைது செய்யப்பட்டனர்.

செலோனி துவ எனும் படகிலிருந்தி 14, தமிழர்கள் 5 சிங்களவர்கள் உட்பட 19 பேர் க்கைது செய்யப்பட்டனர்.

சிலாபம் கரையோரத்திலிருந்து 20 கடல் மைல் தொலைவில் இவர்களின் படகுகள் வழி மறிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, சிலாபம், மன்னார், நீர்கொழும்பு, ஆனமடுவ ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் முகத்துவாரம் மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளதுடன் இவர்கள் மேலதிக விசாரணைக்காக குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ந-11)




தகவல் தொழில்நுட்ப உலகின் மகாராஜா
IDM Chankanai
இத்தால் சகலருக்கும் அறியத்தருவது
என்னவென்றால் !!
Challenger Trophy 2012
இணையத்தள வடிவமைப்பு
திறந்த போட்டி
- வயதெல்லை இல்லை
- ஆர்வம் மட்டும் போதுமானது
- 3 நாள் இலவச நிபுணத்துவ பயிற்சி
- வியத்தகு பரிசில்கள்

Entrance fee: Rs.300/=

1st Prize: Rs.15000/ Cash Prize + Challenger Trophy+ Scholarships
2nd Prize:Rs.10000/= Cash Prize + Scholarships
3rd Prize: Rs 5000/= Cash Prize + Scholarships

போட்டியில் பங்குபெற பெயர் வயது முகவரி தொடர்பிலக்கம் முதலிய விபரங்களை நேரில் அல்லது 021 320 23 66 / 021 7 429 060 இலக்கங்களில் அழைத்து பதிவு செய்யவும்.
விண்ணப்ப இறுதித் திகதி:25-09-2012
IDM Chankanai Campus
IDM Nations Campus Chankanai 021 7 429 060
Luxmy Plaza Main Street Chankanai (Kulaththadi) 021 3 202 366



FREE
Training
வேலை வாய்ப்பு நிறைந்த
Web Designing
Networking
Multimedia
Type Free <Course><Name> & Sms to 772395895
MCS IT CAMPUS 324,Palaly road, Jaffna.
Supported by UNDP/JRRP
(சி-1044)

இந்தியாவுக்கு
கொழும்பு- மதுரை -கொழும்பு
7500/= Return
வண்ண வண்ண சேலை கட்டும் மீனாட்சி மதுரையிலே
நாங்கள் போகலாம் நேஷன் ரவல்ஸ்ஸிலே
எண்ணமெல்லாம் உங்கள் கையினிலே!
3DAY 2NIGHT
விமானப்பயணச்சீட்டுக்கள், தங்குமிடவசதிகள், பயணஒழுங்கமைப்புக்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன.
16925/= +Tax
தொலைபேசியூடாக பதிவுசெய்யலாம்
Through telephone you can preregister for the seat.
Nation Popular Travels & Tours
#82பிறவுண் வீதி,யாழ்ப்பாணம். (நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக)
www.nationtravels.com
Hot line 0114651199 Jaffna 0214920920
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்

தொழிற் பயிற்சிகள்
**Mobile Phone Repairing**
Batch I திங்கள் முதல் வெள்ளி வரை 8.30 am-11.00am (காலம்: 2 மாதம்)
Batch II சனி, ஞாயிறு 9.00 am -11.00am
**Electronics**
TV, Mobile Phone, DVD வேறு எலக்ரோனிக் பொருட்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். (காலம்: 10 மாதம்)
**Air Conditioning**
சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்.
பயிற்சி ஆரம்பம்: 15.09.2012 (காலம்: 6 மாதம்)
விபரங்களிற்கு:
Jaffna Technical Institute
இல.7, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 0718561654
கிளை ஸ்ரான்லி வீதி, 56/15, யாழ்ப்பாணம். 0778249949
பயிற்சி முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி வழங்கப்படும்.
சிங்கள வகுப்புகள்
சிங்கள மொழி எழுத வாசிக்க கதைப்பதற்கு ஏற்றவாறு குறுகிய காலத்தில் கற்பிக்கப்படும்.
Batch I திங்கள் - வெள்ளி வரை (8.30 am-10.30am (காலம்: 3 மாதம்)
Batch II சனி, ஞாயிறு 4.00 pm-6.00pm (காலம்: 9 மாதம்)
ஆரம்பம்: 14.09.2012
(417)

அகவை நிறைவில் அகம் மகிழ்ந்து வாழ்த்து




கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்

நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் இலட்சுமணன் தோட்டம் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் வடபத்திரகாளி அம்மன் திருவருட் செல்வப் பேறுபெற்று என்றும் சீர்மியம் மிகு தமிழ் பண்பாட்டுத் தமிழ்ச் சேவை சிறந்து வாழ்க! வாழ்க!

பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தும்
அன்பு நிறை மாணவன் என்றும்-
சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்
B.A, Dip.in Edu, M.A.
பிரதமகுரு, ஆதீனகர்த்தா
நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை.
(397)

தவறிவிட்டது
12.09.2012 அன்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் சென்ற மினி பஸ்ஸில் சாவகச்சேரிக்கும் கொடிகாமத்திற்கும் இடையில் 2 ஒறிஜினல் காணி உறுதியும் 1 அற்றேணித் தத்துவமும் தொலைந்து விட்டது.
கண்டெடுத்தவர்கள் கொடிகாமம் மினிபஸ் காரியாலயம் அல்லது சாவகச்சேரி மினிபஸ் காரியாலயத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0776028427, 0776457019
(415)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.